24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 78 தை 30ஆம் நாள் புதன்கிழமை 13 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050


## நீறு பூத்த நெருப்பாக கனல்கின்றது பகை!

# ரணிலின் பாதுகாப்புப் பிரிவினருக்கு கே.கே.எஸ். முகாமுள் செல்லத் தடை

## தலைமை அமைச்சரின் பாதுகாப்பை கவனிக்க வந்தோர் திருப்பி அனுப்பப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 13

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பிரிவினருக்கு காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு அரச தலைவர் மைத்திரிபால சிறி சேனவின் கீழ் உள்ள நிலையில் இந்தச் சம்பவம் 6 தினங்களுக்கு முன்னர் நடந்துள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு நாளை வரவுள்ளார். >> 21

## வடக்கு நீர்ப் பிரச்சினையை துரிதமாகத் தீர்க்கவேண்டும்

### அரச தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.13

வடக்கில் காணப்படும் நீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டால் வடக்கில் காணப்படும் ஏனைய அபிவிருத்திப் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

விரிவு 2 ஆம் பக்கம்

## பரீட்சைகளால் நெருக்குதலா? ஆராய்வதற்கு குழு நியமனம்

கொழும்பு, பெப்.13

க.பொ.த. உயர்தரப் பரீட்சைகள் மாணவர்களுக்கு மேலதிக நெருக்குதல்களைக் கொடுக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கு பரீட்சைத் திணைக்களம் குழுவொன்றை நியமித்துள்ளது. அதற்கான பணிப்புரையை கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் பிறப்பித்துள்ளார்.

இலங்கையின் கல்விப் பரீட்சைகள் மாணவர் >> 21

## உயர்தர மாணவருக்கு "ரப்" வழங்க அனுமதி

### 3 மாதங்களுக்குள் திட்டம் நடைமுறை

கொழும்பு, பெப்.13

உயர்தர மாணவர்களுக்கு "ரப்" கணினி வழங்கும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டம் பரீட்சார்த்தத் திட்டம் 3 மாதங்களில் அனைத்து 1ஏபி தரப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. >> 21

## சுவிஸ், கனடா தூதுவர்களுடன் சரவணபவன் எம்.பி. சந்திப்பு



கொழும்பு, பெப்.13

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை, வடக்கின் நிலைமைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சுவிற்சர்லாந்து தூதுவர் ஹான்ஸ்பீட்டர் மொக், கனடா தூதுவர் டேவிட் மக்கினன் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றுள்ளது. >> 21

## மனித உரிமையைக் காக்க பின்வாங்காதாம் இலங்கை

### ஐ.நா. அதிகாரிக்கு நீதி அமைச்சர் உறுதி

கொழும்பு, பெப்.13

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசு காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதிலிருந்து ஒரு போதும் பின்வாங்க மாட்டோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சட்டப்பிரிவு அதிகாரி >> 21

## 25க்கு முன் ராணுவத்தினரை கைது செய்ய முயற்சியாம்!

தேசிய சுதந்திர முன்னணி பதைபதைப்பு >> 20

## ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு கதையைக் கூறுகிறார் மகிந்த

### சாடுகிறார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், பெப். 13

மகிந்த ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை முன்வைக்கின்றார். புதிய அரசமைப்பு வேண்டாம் என்று இங்கு வைத்துச் சொன்னவர், இந்தியா சென்று அரசமைப்புத் திருத்தம் வேண்டும் என்கின்றார். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தாம் ஆட்சிக்கு வந்ததும் அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாகத் தமிழ் >> 21

## அராலி வீதியில் பெண்ணின் தாலிக் கொடி அறுப்பு

யாழ்ப்பாணம், பெப்.13

வீதியால் சென்ற பெண்ணின் தாலிக் கொடியை, உந்துருளியில் வந்தவர்கள் அறுத்துக் >> 21

## ஐ.நாவில் இம்முறை இலங்கைக்கு ஆப்பு

### அடித்துக் கூறுகின்றார் மகிந்த



கொழும்பு, பெப். 13

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் மார்ச் மாதக் கூட்டத் தொடரில் இலங்கை மீதான பன்னாட்டு அழுத்தங்கள் இம்முறை மேலும் அதிகரிக்கும். அதற்கான வேலைத்திட்டங்களை முத்தரப்பு நாடுகளுடன் இணைந்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் சகாக்களான >> 21

## சிங்கள மக்களைச் சமாளிக்க தெற்கில் பொய்ப் பரப்புரை

### அரசமைப்புத் தொடர்பில் பலதையும் பேசுகின்றனர்; கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 13

தெற்கில், சிங்கள மக்கள் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பில் போலிப் பரப்புரை பரப்பப்பட்டு வருகின்றது. சிங்கள மக்களைச் சமாளிப்பதற்கு ஆட்சியில் உள்ளவர்கள் ஒவ்வொரு கருத்துக்களைச் சொல்லலாம். மூவின மக்களின் இணக்கத்துடன்தான் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட இருக்கின்றது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். >> 21

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பாகத் தீர்மானம்

### பிரிட்டன் அதிகாரப்பூர்வ அறிவிப்பு

கொழும்பு, பெப். 13

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அடுத்த மாதம் இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வரும் நடவடிக்கைக்குத் தலைமை தாங்கப் போவதாக பிரிட்டன் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதரகம் இதுகுறித்து நேற்றுமுன்தினம் சிறப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் >> 20




# வடக்கு நீர்ப் பிரச்சினையை துரிதமாக தீர்க்க வேண்டும்

## நீர் வழங்கல் திட்ட மீளாய்வில் அரச தலைவர் தெரிவிப்பு



**கொழும்பு, பெப்.13**

**வடக்கு மக்களின் வறுமை நிலைக்குப் பிரதான காரணியாகக் காணப்படும் நீர்ப் பிரச்சினைக்குத் துரித தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாணத்துக்கு முன்மொழியப்பட்டுள்ள நீர் வழங்கல் செயற்றிட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு பற்றிய கலந்துரையாடல் நேற்று அரச தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

விவசாயத்தைப் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்ட வடக்கு மக்களுக்கு அவர்களது விவசாயத்துக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள் உரியவாறு பெற்றுக் கொடுக்கப்பட்டால், வடக்கில் காணப்படும் ஏனைய அபிவிருத்திப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும்.

சுற்றாடல் பாதிப்பின்றி நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக துரித மற்றும் வெற்றிகரமான பெறுபேறுகளை வடக்கு மக்கள் பெற்றுக் கொள்வார்கள் என்று அரச தலைவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண நீர்ப்பாசன மற்றும் குடி தண்ணீர் தேவைகளை நிறைவு செய்ய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஏனைய நீர் வழங்கல் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் மீளாய்வு செய்யப்பட்டது.

வடமத்திய பெரும் கால்வாய்த் திட்டம், நெதர்லாந்து அரசின் நிதியுதவியில் 2020ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ள "யாழ்ப்பாணத்துக்கு நீர்" செயற்றிட்டம் ஆகியன தொடர்பாகவும் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் ஜயிக்கா நிறுவனத்தின் நிதியுதவியில் முன்னெடுக்கப்படும் "எல்லக்கா" குளக் கட்டமைப்பு அபிவிருத்திச்செயற்றிட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மகாவலி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும, அந்த அமைச்சின் செயலர் அநுர திசாநாயக்க மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்- என்றுள்ளது. (எ)







## மூதூர் படுகொலையின் 23ஆவது நினைவேந்தல்

திருகோணமலை, பெப்.13

திருகோணமலையில் 1996ஆம் ஆண்டு நடந்த படுகொலையின் 23ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிளிவெட்டி, குமாரபுரம் கிராமத்தில் சிறுவர்கள் உட்பட 26 பொதுமக்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்த கொலைச் சம்பவத்துக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை.

உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நேற்று நினைவேந்தல் நடத்தப்பட்டது. உறவினர்கள் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. சிறப்பு வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் மற்றும் தொண்டு அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செய்தனர். (எ-40)

## தயாசிறி சிகிச்சையில்

கொழும்பு, பெப். 13

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, தயாசிறி ஜெயசேகரவுக்கு மாரடைப்பு ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்று மாலை அவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து, சிறி ஜெயவர்த்தனபுர தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டு, தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஓ.5)



## அமைச்சர் புத்திக பத்திரன கிளிநொச்சிக்குப் பயணம்

கொழும்பு, பெப்.13

கிளிநொச்சிக்குப் பயணம் செய்த பிரதி அமைச்சர் புத்திக பத்திரன பிற்பகல் இரண்டு மணியளவில் நேற்றுக் கிளிநாச்சி பரந்தன் இரசாயன தொழிற்சாலை இருந்த பகுதிக்கு நேரில் சென்றுள்ளார். இரசாயனத் தொழிற்சாலையைப் பார்வையிட்டதுடன், ஆனையிறவு உப்பளத்தையும் பார்வையிட்டார்.

அமைச்சருடன், திணைக்கள அலுவலர்கள், ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் சென்றிருந்தனர். (எ-35)

## ரணிலுக்கு எதிரான மனு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப்.13

தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை சவாலுக்கு உட்படுத்தும் மனு மீதான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளிலிருந்து தனிப்பட்ட காரணத்தால் நீதிபதி தீபாலி விஜேசுந்தர ஏற்கனவே விலகியிருந்தார்.

அரச நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கி பணம் ஈட்டும் வரையறுக்கப்பட்ட லேக் ஹவுஸ் அச்சகம் மற்றும் வெளியீட்டாளர் தனியார் நிறுவனத்தின் முக்கிய பங்குதாரராக பிரதமர் ரணில் விக்ரமசிங்க செயற்பட்டு வருகின்றார்.

இந்த நிலையில் அவரால் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவிவகிக்க முடியாது எனத் தெரிவித்து கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஷர்மிளா கோனவல, தலைமை அமைச்சருக்கு எதிரான மனுவைத் தாக்கல் செய்திருந்தார். (எ)

# செஞ்சோலைக் கிணறுகளை சுத்தப்படுத்தத் தடையில்லை

## முன்னாள் உப தவிசாளர் விளக்கம்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி செஞ்சோலை வளாகத்தில் உள்ள கிணறுகளைச் சுத்தப்படுத்த முயன்றபோது முன்னாள் உப தவிசாளர் இடையூறு ஏற்படுத்தினர் என்று கிளிநொச்சி மாற்று வலுவுள்ளோர் அமைப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். அந்தக் குற்றச்சாட்டை மறுக்கும் அவர், தான் கூறியதைக் கருத்து மாறி விளங்கிக்கொண்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் இருந்த செஞ்சோலை மற்றும் காந்தரூபன் அறிவுச் சோலைக் காணிகள் கடந்த நவம்பர் மாதம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டிருந்தன. அவை செஞ்சோலையில் முன்னர் இருந்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. **ஆனால் அங்கே எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை** என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தண்ணீர், மின்சாரம், மலசலகூடம் என்று எதுவும் இல்லை. கூரைகள், கதவுகள், ஜன்னல் இல்லாத வெறும் கட்டடங்கள் மாத்திரமே காணப்படுகின்றன.

இந்த நிலையில் அந்தக் காணிகளிலுள்ளவர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சங்கம் கனடா உறங்கா விழிகள் அமைப்பின் உதவியுடன் குறித்த வளவுக்குள் காணப்பட்ட நான்கு கிணறுகளையும் சுத்தம் செய்து வழங்கும் பொறுப்பை ஏற்று நேற்றுக்காலை பணிகளில் ஈடுபட்டனர்.

இதன்போதே அங்கு சென்ற கரைச்சி பிரதேச சபையின் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் உப தவிசாளர் பா. நகுலேஸ்வரன் தலைமையிலான குழுவினர் **கிணறு சுத்தம் செய்யும்** பணியை இடைநிறுத்துங்கள் என்றும் தங்களைத் தவிர வேறு எவரும் இந்த வளவுக்குள் எந்தவித வேலைகளையும் செய்யக்கூடாது என்றும்கூறி சங்கத்தலைவருடனும்முரண்பட்டுள்ளனர் என்று சங்கத்தினர் கூறுகின்றனர்.

இது தொடர்பில் நகுலேஸ்வரனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது கிணறுகளைத் துப்புரவு செய்யவேண்டாம் என்று தாம் தடைஏற்படுத்தவோ இடையூறு ஏற்படுத்தவோ இல்லை. அந்தப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தனர். மனித பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளுடன் துப்புரவுப் பணியை முன்னெடுங்கள் என்று கூறியிருந்தேன். அவர்கள் அதைத் தவறாக **விளங்கிக் கொண்டுள்ளனர் போலுள்ளது என்று தெரிவித்தார். (த-214)**

## நல்லிணக்க பொறிமுறை தொடர்பில் கூட்டம்

நல்லிணக்கப் பொறிமுறைச் செயற்பாடுகள் எவ்வாறு இலங்கையில் செயற்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பிலான செயலமர்வு நேற்றுத் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒன்றிணைப்பதற்கான செய லகம் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் நல்லிணக்கப் பொறிமுறைச் செயற்பாடுகள், நிலைமாறு கால நீதி, பாதிக்கப்பட்டவர்களின் மீளிணைப்பு மற்றும் நல்லிணக்கம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகத்தின் செயற்பாடுகள் உட்பட பல விடயங்கள் அதில் கலந்துரையாடப்பட்டன. வளவாளர்களாக நல்லிணக்க பொறிமுறைகள் ஒன்றிணைப்பதற்கான செயலகத்தின் பணிப்பாளர் சஞ்சீவ விமல குணரத்ன, நல்லிணக்க பொறிமுறைகளை ஒன்றிணைப்பதற்கான செயலகத்தின் பதுளை வலய செயலணி ஒருங்கிணைப்பாளர் நடேசன் சுரேஷ் மற்றும் காணாமல் போனோர் அலுவலகத்தின் ஆணையாளர்களான சட்டத்தரணி எஸ்.கே.லியனகே,ஜெயதீபா புண்ணியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. அருந்தவராஜா,மாவட்ட உதவிச் செயலர் என். பிரதீபன், திணைக்களத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டார்கள். (எ-40)

# அதிகாரிகளின் பேச்சை நம்பி நடுத்தெருவில் நிற்கும் அவலம்

## இருந்த கொட்டிலையும் இழந்த குடும்பம் வாழ்வாதாரத்துக்கு வழி தெரியாமல் தவிப்பு


தகடு பொருத்தப்பட்டுள்ள குடும்பத் தலைவரின் கால்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தினரின் வார்த்தையை நம்பி புதிய வீடு கட்டுவதற்காக 7 ஆண்டுகளாக வாழ்ந்த கொட்டிலை அகற்றிய குடும்பத் தலைவர், அந்தக் கொட்டில் சரிந்து வீழ்ந்ததில் கால் முறிவடைந்து படுக்கையில் உள்ளார். இந்த நிலையில், வீட்டுத் திட்டம் உங்களுக்கு (அந்தக் குடும்பம்) கிடைத்துள்ளது என்று தவறுதலாகக் கூறியுள்ளோம் எனப் பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். இதனால் இருப்பதற்கு இருப்பிடம் இல்லாமல், வாழ்வாதாரத்துக்கு வழிதெரியாமல் குடும்பத்தினர் அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இலக்கம் 30, காரைநகர் வீதி, மீனாட்சிபுரம் கோட்டை என்னும் முகவரியில் உள்ள குடும்பத்தினரே இத்தகைய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.


வீதிக்கு வந்த வீட்டுப் பொருட்கள்

**19ஆண்டுகளாக வீடு இல்லை**

திருமணமாகி கடந்த 19 ஆண்டுகளாக சொந்தக் காணி, வீட்டு வசதியின்றி இரவல் காணியில் மு.சத்தியகுமார் இருந்துள்ளார். கூலி வேலைகளைச் செய்து வாழ்க்கையை நடத்தி வருகின்றார். கடும் உழைப்பால் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இலக்கம் 30 காரைநகர் வீதி, மீனாட்சிபுரம், கோட்டை எனும் முகவரியில் உள்ள காணியை வாங்கியுள்ளார். அதில் தகரக் கொட்டில் ஒன்றை அமைத்து அங்கு வசித்துள்ளார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் பாடசாலை செல்கின்றனர். அவர்களுடைய கல்விச் செலவு, உள்பட வாழ்வாதாரம் அனைத்தும் அவருடைய உழைப்பில் இருந்தே பெறப்படுகின்றன. சொந்தக் காணி வைத்திருந்தும், கடந்த 7ஆண்டுகளாக எந்தவொரு வீட்டுத்திட்டமும் சத்தியகுமாருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**வீட்டுத் திட்டம்**

கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வீடுகள் அற்ற மக்களுக்கு பிரதேச செயலகத்தில் கூட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்துக்கு 175 வீடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இடைக்கால கணக்கு அறிக்கையின் ஊடாக 48 வீடுகளுக்கு முதல்கட்டமாக நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. மீனாட்சிபுரம் பகுதியில் 5 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. சத்தியகுமாரும் அதில் ஒரு பயனாளியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்கான அடிக்கல் நடுவதற்கு நாளையே உடனடியான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர். சத்தியகுமாரின் காணி சிறியது. தங்கியிருந்த தற்காலிகக் கொட்டிலை அகற்றினாலே வீடு அமைக்க முடியும். அதனையடுத்து இரவோடு இரவாக சத்தியகுமார் தற்காலிகக் கொட்டிலை அகற்றியுள்ளார்.

**கால் முறிந்தது**

எதிர்பாராத விதமாக கொட்டில் சரிந்து சத்தியகுமாரின் மேல் வீழ்ந்தது. அவர் படுகாமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கால் முறிந்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அவருடைய காலில் தகடு வைக்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்கள் அவர் படுக்கையிலேயே இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். வீடு அமைப்பதற்கு கடன் வாங்கி, கல் மற்றும் மண் போன்றவற்றை சத்தியகுமார் கொள்வனவு செய்துள்ளார். பிரதேசசெயலகத்தால் நடத்தப்பட்ட கூட்டத்துக்குப் பின்னர் பிரதேச செயலகம் சத்தியகுமாருடனோ, அவரது மனைவியுடனோ தொடர்பு கொள்ளவில்லை.

**ஏமாற்றம்**

சத்தியகுமாரின் மனைவி ஒரு வாரத்தின் பின்னர், பிரதேச செயலகம் சென்றுள்ளார். வீடு தொடர்பில் விசாரித்தார். அவருக்குப் பேரதிர்ச்சி கொடுக்கும் தகவலை பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது. வீடு உங்களுக்கு வரவில்லை, தவறுதலாக நீங்கள் உள்வாங்கப்பட்டுள்ளீர்கள் எனப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது என்று சத்தியகுமாரின் மனைவி தெரிவித்தார். மாவட்டச் செயலகத்துக்குச் சென்று விவரங்களைப் பார்த்தபோதும் அதில் தமது பெயர் இல்லை என்றும் சத்தியகுமாரின் மனைவி குறிப்பிட்டார்.

**அவலம்**

கொட்டில் வீடு என்றாலும் நாளாந்தம் உழைக்கும் பணத்தில் வாழ்ந்த சத்தியகுமார் குடும்பம் தற்போது அந்தக் கொட்டிலும் இன்றி, வாழ்வதற்கு வீடும் இன்றி, சத்தியகுமாரின் உழைப்பும் இன்றித் துவண்டுபோயுள்ளது. 'கடும் உழைப்பாளி மாதம் 20ஆயிரம் ரூபாய் உழைப்பார். அதிலேயே பிள்ளைகளின் கல்விச் செலவு, சாப்பாடு என்று வாழ்ந்துவந்தோம். இப்போது வாழ்வதற்கு வழியற்று நிற்கின்றோம். ஆறுமாதங்கள் படுத்திருந்தே காயத்தை ஆற்ற வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர். இனி எமக்கு எப்படி வருமானம். இரண்டு பிள்ளைகளை வைத்துக் கொண்டு நான் எங்கு செல்வேன். தற்போது அயலில் உள்ள ஒரு வீட்டில் அடைக்கலம் புகுந்துள்ளோம். படுக்கையில் உள்ள எனது கணவரையும், பாடசாலை செல்லும் பிள்ளைகளையும் எத்தனை நாளைக்கு இங்கேயே வைத்திருக்க முடியும். எமக்கு வீடு கிடைத்துள்ளது என்று கூறி கடிதம் தந்ததால் தானே நாங்கள் கொட்டிலைக் கழற்றினோம். கடன்பட்டு கல், மண் பறித்தோம். இப்போது அந்தக் கடனை யார் கட்டுவார்கள், நாங்கள் சாப்பிடுவதற்கு என்ன செய்யப்போகின்றோம்?' என்று சத்தியகுமாரின் மனைவி கண்ணீர் வடித்தார்.

**பதிலில்லை**

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பொ.தயானந்தனின் தனிப்பட்ட அலைபேசி இலக்கத்துக்கு நேற்றுப் பகல் 1.10 மணிக்கு இரண்டு முறை அழைப்பு எடுத்தபோதும் அவர் பதிலளிக்கவில்லை. மீண்டும் 1.16 மணிக்கு அலுவக தொலைபேசிக்கு அழைத்தபோதும் பதிலளிக்கவில்லை. மூன்றாவது தடவையாக பகல் 1.50 மணிக்கு பிரதேச செயலரின் தனிப்பட்ட அலைபேசிக்கு அழைப்பு எடுத்தபோதும் அதற்கும் பதிலளிக்கவில்லை. இறுதியாக 1.52 மணிக்கு அலுவலகத் தொலைபேசிக்கு அழைப்பு எடுத்தபோதும் பதிலளிக்கவில்லை.

(ஓ-5,21)

# அரச வீட்டுத் திட்டங்களை முறையாக பகிரவேண்டும்

## ஆளுநர் ராகவனிடத்தில் பிரஜைகள் குழு வலியுறுத்தல் ஏனைய பல்வேறு கோரிக்கைகளையும் அது முன்வைத்தது

மன்னார், பெப். 13

அரச வீட்டுத்திட்டமானது போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும் விதவைகள் மற்றும் குறைவான வருமானமுள்ளவர்களுக்கும் மறுவாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் முறையாக பகிர்ந்தளிக்கப்பட ஆவண செய்யப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநரிடத்தில் கோரிக்கையை முன்வைத்தது மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு.

மன்னார் மாவட்டத்துக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆளுநர் சுரேன் ராகவன் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக அவருக்கும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவுக்கும் இடையிலான சந்திப்பு மன்னார் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது ஆசிரியர் பற்றாக்குறை, வீட்டுத் திட்டம், அபிவிருத்தித் திட்டங்கள், தனியார் கல்வி நிலயங்களின் செயற்பாடுகள், அரச காணிப் பங்கீடுகள், மேய்ச்சல் நிலம் உள்ளிட்ட பல விவகாரங்கள் தொடர்பில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளது.

**தனியார் கல்வி நிறுவனங்கள்**

மன்னாரில் மும்மத மக்கள் செறிந்து வாழ்கின்றனர். இந்தப் பகுதியில் வெள்ளி, மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் கல்வி நிறுவனங்கள் கட்டண வகுப்புக்கள் நடத்துவதால் வெள்ளிக் கிழமைகளில் இந்து மற்றும் முஸ்லீம் மாணவர்கள் தங்கள் வழிபாடுகளைக் கடைப்பிடிக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவ்வாறு ஞாயிறு தினம் கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களுக்கு ஒரு முக்கிய நாளாக இருக்கின்றது. இதனால் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களின் தனியார் வகுப்புக்களை நடத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

**அரச காணி பங்கீடு**

மன்னாரைப் பொறுத்தமட்டில் அரச காணி பங்கீட்டு அளிப்பு முறைகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. இவை முறையாக பரிசீலிக்கப்பட்டு தேவைப்படுவோருக்கு பகிர்தளிக்கப்பட வேண்டும். இதுவிடயமாக இங்குள்ள சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் வினவுகின்றபொழுது இவர்களால் சரியான விவரங்களை வெளிப்படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர்.

**வீட்டுத்திட்டம்**

அரச வீட்டுத்திட்டமானது போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கும், விதவைகள் மற்றும் குறைவான வருமானமுள்ளவர்களுக்கும் மறுவாழ்வு முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் முறையாக பகிர்ந்தளிக்கப்பட ஆவண செய்யப்பட வேண்டும்.

**மேய்ச்சல் நிலம்**

மன்னாரில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாது கால்நடை வளர்ப்போர் பெரும் அவதிக்கு உள்ளாகி வருகின்றனர். ஏற்கனவே கால்நடைகளுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் சட்டவிரோதமாக விவசாயம் செய்வோரை அதிகாரிகள் கண்டுகொள்ளாது இருப்பது வேதனைக்குரியது. இதுவிடயமாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**அபிவிருத்தி திட்டங்கள்**

அரசினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்களான வீதி அமைத்தல், குடிதண்ணீர் வழங்கல், வீதி விளக்குகள் பொருத்துதல், வாசிகசாலை, பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்தல், சிறுவர் பூங்கா அமைத்தல் போன்ற அபிவிருத்தித்திட்டங்கள் எல்லாக் கிராமங்களுக்கும் சமமாக சென்றடைவதற்கு ஆவண செய்யப்பட வேண்டும்.

**ஆசிரியர் பற்றாக்குறை**

பாடசாலைகளில் பொருத்தமான பாடங்களுக்கான ஆசிரிய ஆளணிகளை வழங்குவதற்கும் பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகள், பௌதீக வள வசதிகளை தேவைக்கேற்ப வழங்குவதற்கும் ஆவண செய்யப்படல் வேண்டும்.

**கால்நடை இறப்பு**

அண்மைக் காலமாக மன்னார் மாவட்டத்தில் கால்நடைகள் கால்வாய் என்ற நோய்க்கு உள்ளாகி நாளுக்கு நாள் இறந்து வருகின்றன. கால்நடைகள் திடீர் நோய்களினால் இறப்பதைத் தடுப்பதற்குரிய விரைவான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகளின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு குறித்த சந்திப்பில் வலியுறுத்தியது.

(ம-60)

## செயலமர்வு

வடமராட்சி, பெப்.13
'சூழலை மீட்டெடுப்பதை நோக்கி உள்ளூராட்சி மன்றங்களும் அதன் வலைப் பின்னல்களும்' என்ற தொனிப்பொருளில் செயலமர்வு ஒன்று பருத்தித்துறை அரசினர் ஆதார மருத்துவமனையில் நேற்று இடம் பெற்றது.
எஸ்.எல்.சி.டி.எப் இன் அனுசரனையுடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஒழுங்கமைப்பின் கீழ் மருத்துவமனை அலுவலர்களுக்கு இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. (ஜ-173)

## பொதுமக்கள் தினம்

யாழ்ப்பாணம், பெப்.13
ஆளுநரின் பொதுமக்கள் தினம் கடந்த வாரம்போல் இன்றும் கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் செயலகத்தில் வடக்கு மாகாண சபை அமைச்சுக்களின் செயலர்கள் மற்றும் திணைக் களங்களின் தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

# கூரைக்கு பனையை பயன்படுத்தாது வேறு பொருள்களைப் பயன்படுத்துக

### வீடுகள் கட்டுவோருக்குப் பிரதேச செயலர் அறிவுறுத்து

*சாவகச்சேரி, பெப். 13*
அரச வீட்டுத் திட்டத்தில் தெரிவானோர், புதிதாக வீடுகள் கட்டும்போது வீட்டுக் கூரைக்கான பனைமரங்களுக்குப் பதிலாக மாற்று மரங்களையும், கட்டட வேலைகளுக்குப் பாலியாற்று மணலையும் பூச்சு வேலைக்கு நாகர்கோவில் மணலையும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தென்மராட்சியில் வீடமைப்புத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட 165 பயனாளிகளுடனான சந்திப்பு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு மேற்கண்டவாறு அறிவுறுத்தினார்.
வீட்டுக் கூரைகளுக்கு அதிகமானோர் பனை மரங்களையே பயன்படுத்துகின்றனர். பனை வளம் அழிந்து போகாமல் இருக்கப் பனைக்குப் பதிலாக மாற்று மரங்களைப் பயன்படுத்த வேண்டும்.
ஒரே நேரத்தில் 165 பேருக்கு வீட்டுத் திட்டம் கிடைத்ததால் அவசரப்படாமல் மூலப் பொருள்களைக் கொள்வனவு செய்து பயன்படுத்துங்கள்.
அனைவரும் ஒரே நேரத்தில் மூலப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முற்படும் போது விலைகள் அதிகரித்துச் செலவு அதிகரிக்க வாய்ப்புள்ளது. பிரதேசத்தில் மணல் வளம் குறைவடைந்துள்ளது.
கட்டட வேலைகளுக்குப் பாலியாற்று மணலையும் பூச்சு வேலைக்கு நாகர்கோவில் மணலை பயன்படுத்தவும்.
மூன்று மாதங்களுக்குள் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு பயனாளியும் பிரதேச செயலகத்துடன் ஒத்தழைத்து வீட்டுத்திட்டம் சிறப்பாக அமைய பாடுபடல் வேண்டும். ஒவ்வொரு கட்டட வேலைகளின் பின்னரே நிதி 5 கட்டங்களாக வழங்கப்படும். பயனாளிகள் வீடுகள் அமைக்க முன்னர் உள்ளூராட்சிச் சட்டங்களுக்கு அமைவாகக் கட்டடம் அமைப்பதற்குத் தங்கள் பகுதியில் உள்ள சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரிப் பிரதேச சபை போன்றவற்றில் உரிய கட்டட விண்ணப்பங்களைப் பெற்று அவர்களால் கோரப்படும் விடயங்களைக் கையளித்து அங்கீகாரம் பெற வேண்டும்.
பிரதேச செயலக அலுவலர்கள் எந்த நேரமும் தங்களுக்கு வழிகாட்டவும் ஆலோசனைகள் வழங்கவும் தயாராக இருப்பார்கள். வீடமைப்புத் தொடர்பில் பிரச்சினை காணப்படின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் - என்றார்.
வீட்டுத் திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவானோரில் முதற்கட்டமாக ஆயிரத்து 500 பேருக்கும், அதே வேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 4 ஆயிரத்து 500 பேருக்கும் வீடுகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. வீடு கட்டும் பணிகள் உத்தியோகபூர்வமாகக் கடந்த தைப் பொங்கலுடன் ஆரம்பித்திருந்தன. (கு-9)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.13
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திருமதி விமலநாதன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ)

## பகுதிநேர கற்கைக்கு விண்ணப்பம் அனுப்பலாம்

காரைநகர், பெப்.13
இலங்கைத் தொழிற் பயிற்சி அதிகாரசபையின் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பகுதிநேரக் கற்கை நெறிகளுக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.
அடிப்படை கணினிப் பிரயோகம், குளிர்சாதனம் மற்றும் வளிசீராக்கி உபகரண திருத்துனர் ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இந்தக் கற்கை நெறிகளைப் பயில விரும்புவோர் நாளைமறுதினம் 15 ஆம் திகதிக்கு முன்னர் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு நிலைய முகாமையாளர் வே. ஸ்ரீகுகன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ)

### பல கோரிக்கைகளை முன்வைத்து

## ஆசிரியர் சேவைச் சங்கம் சுவரொட்டிப் போராட்டம்!

கொடிகாமம், பெப். 13
இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம் நாடு முழுவதும் சுவரொட்டிப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது. ஆசிரியர், அதிபர்களின் பல்வேறுபட்ட உரிமைகளையும் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் தொடக்கம் இந்தப் போராட்டம் நடத்தப்படுகிறது என்று சங்கம் தெரிவித்தது.
22 வருடங்கள் சம்பள முரண்பாட்டை நீக்கி ஆசிரியர்களின் சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், கொள்ளையடிக்கப்பட்ட 30 மாதங்கள் கால நிலுவைச் சம்பளத்தை உடன் வழங்கு, படிவங்கள் நிரப்புதல் மற்றும் வெளி நிறுவனங்களின் வேலைகளைக் கற்பித்தலுக்குத் தடையாய் இருக்கின்ற செயல்




பாடுகளை நிறுத்தி வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு சுதந்திரமாகக் கற்பிக்க இடம் கொடுக்க வேண்டும், மேலதிக வேலைகளுக்காகப் பணியாளர்களை இணைத்துக்கொள், 2016 க்குப் பின்னர் நியமனம் பெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய சம்பளத் திட்டத்தை இல்லாமல் செய்திருக்கின்றார்கள், அவர்களின் ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் பெற்றுக் கொடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துச் சுவரொட்டிப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சங்கம் தெரிவித்தது.
தீர்வு கிடைக்காத பட்சத்தில் அனைத்து ஆசிரியர்கள், அதிபர்களை ஒன்றிணைத்து தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்ல வேண்டி ஏற்படும் என்று இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார். (கு-159)



# சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி முன்னேற்றம் அடையவேண்டும்

### தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவுரை

கொடிகாமம், பெப்.13
கிராமப் புறப் பாடசாலையில் கற்கின்ற மாணவர்களுக்குத்தான் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. அந்தச் சந்தர்ப்பத்தை நீங்கள் சரியான முறையில் பயன்படுத்தி நல்ல குடிமகனாக மாறி உங்களையும், இந்தச் சமூகத்தையும் வளர்க்க வேண்டும்.
இவ்வாறு தென்மராட்சிக் கல்வி வலய நிர்வாகப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பளர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
போக்கட்டி அ.த.க.பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம்சூட்டும்நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது.
அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வருங்காலம் போட்டி நிறைந்த ஒரு காலம். இந்தப் போட்டியைச் சமாளிப்பதற்காக நல்ல பயிற்சிகளைப் பெற வேண்டும். உங்களுடைய அலுவலகத்தில் நான் பார்த்தேன். அலுவலகத்தின் பொதுவான பணிகள் என்று போட்டிருக்கிறீர்கள். உங்களுடைய நல்ல விடயங்களைக் கூறியிருக்கிறீர்கள். அதிலே நேர முகாமைத்துவம் பின்பற்ற வேண்டும். ஏனையவர்களுடன் சேர்ந்து இயங்குகின்ற பண்பை வளர்க்க வேண்டும்.
மற்றவர்களை மதித்து நடக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று காட்டியிருக்கிறீர்கள்.
அந்த விடயங்கள்தான் இன்று எங்களுக்குடைய சமூகங்களுக்குத் தேவையாக இருக்கிறது - என்றார்.
நிகழ்வில் சிறப்பு விருந்தினராகத் தென்மராட்சிக் கல்வி வலய அலுவலகர்கள், பாடசாலையின் அபிவிருத்தி சங்கச் செயலர் ம.மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் க.அசோகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-159)

## உந்துருளி விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, பெப். 13
இரு உந்துருளிகள் விபத்துக்குள்ளானதில் பெண் உட்பட இருவர் காயமடைந்தனர். காயமடைந்த பெண் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்த விபத்து ஏ-9 வீதியில் சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. முன்பாகப் பயணித்த உந்துருளி சமிக்ஞையின்றி வீதியின் மறுகரைக்குச் செல்லமுற்பட்டபோது பின்தொடர்ந்து வந்த உந்துருளி மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு-9)

# தம்புள்ளவை நாடும் யாழ். விவசாயிகள்!

## இங்குள்ள இழுபறிகளே அதற்குக் காரணம் என்று கமக்கார அமைப்புக்களின் தலைவர் சுட்டுகின்றார்

*யாழ்ப்பாணம், பெப். 13*

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள விவசாயிகள் தத்தமது உற்பத்திகளை இங்கிருந்து காவிச் சென்று தம்புள்ளையில் விற்பனை செய்யும் நிலையிலேயே உள்ளோம் என மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் க.தியாகலிங்கம் தெரிவித்தார்.



இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் மேலும் கருத்துத் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது சகல மரக்கறி வகைகளுமே விலை வீழ்ச்சியடைந்த காரணத்தால் விவசாயிகளின் உற்பத்திச் செலவை ஈடுசெய்வது என்பதே பெரும் நெருக்கடியாக உள்ளது. அதனைவிட பெரும் கவலை என்னவென்றால் நாம் சொற்ப விலைக்காக எமது உற்பத்திகளை இங்கிருந்து காவிச் சென்று தம்புள்ளயில் உள்ள சந்தையில் விற்பனை செய்யும் நிலையிலேயே உள்ளோம்.

இன்று குடாநாட்டில் பீற்றூட் மற்றும் கோவா ஆகிய இரண்டும் 20 முதல் 25 ரூபா வரையிலும், கரட் 70 ரூபாவுக்கும், கத்தரி 60 முதல் 65 ரூபா வரையும் மொத்த விலைக்கு வழங்க முடியும். இருப்பினும் விவசாயிகள் இங்கிருந்து காவிச் சென்று தம்புள்ளயில் பீற்றூட் 15 ரூபாவுக்கும், கோவா 10 ரூபாவுக்கும், கரட் 50 ரூபாவுக்கும், கத்தரி 50 ரூபாவுக்கும் வழங்கும் நிலமைக்குத் தள்ளப்படுகின்றோம். அவ்வாறு நாம் இங்கிருந்து காவிச் சென்று வழங்கும் பல மரக்கறிகள் திரும்பவும் யாழ்ப்பாணம் வரும் சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண விவசாயிகள் யாழில் உள்ள பிரபல சந்தைகளில் வழங்காது தம்புள்ளைக்கு ஒரு மூடைக்கு 150 ரூபா செலவு செய்து குறைந்த நிலையில் வழங்குவதற்கும் முக்கிய காரணங்கள் உள்ளன.

அதாவது குடாநாட்டுச் சந்தைகளில் கழிவு நடைமுறை இல்லை என அறிவித்தல் தொங்கவிடப்பட்டிருந்தாலும் அது வெறும் எழுத்து மட்டத்திலேயே உண்டு. நடைமுறையில் இல்லை. பணத்தைத் தருவதிலும் இழுபறிகள் உள்ளன. ஏலத்தில் எடுத்த வியாபாரியைக் கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது. இத்தனை நெருக்கடிகள் அலைச்சல்கள் தம்புள்ளயில் இல்லை. இதேநேரம் குறித்த விடயத்தை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், முன்னாள் விவசாய அமைச்சர், பிரதேச சபையினர் ஆகிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். எனினும் பயன் எதுவும் கிடைக்கவில்லை - என்றார். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் க.தியாகலிங்கம் தெரிவித்தமை தொடர்பில் திருநெல்வேலி பொதுச் சந்தையினை ஆளுகை செய்யும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தியாகமூர்த்தியைத் தொடர்பு கொண்டு கேட்டபோது:

கழிவு விடயம் நடைமுறைப்படுத்த அனுமதிப்பது கிடையாது. இருப்பினும் விவசாயிகளும் வியாபாரிகளும் தனிப்பட்ட ரீதியில் உடன்படுவது தெரியவருவதில்லை. இருப்பினும் தராசில் இருந்து பொருள் எடுக்கும்போதே பணத்தை வழங்குவதன் மூலம் மூன்று பிரச்சனைக்கும் தீர்வை வழங்க முடியும் என்பதனால் இது தொடர்பில் வியாபாரிகளுடன் மீண்டும் கலந்துரையாடித் தீர்வு எட்டப்பட முயற்சிக்கப்படும் - என்றார். (ம-105)

# வலி. மேற்கு செயலகத்தை விசாலமாக்க நடவடிக்கை!

வலிகாமம், பெப். 13

வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தை விசாலமான பரந்த பிரதேசத்துக்குக் கொண்டு செல்வதற்கு வலி. மேற்கு மக்கள் அபிவிருத்திக் குழு முன்வந்துள்ளது.

மூளாய் மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் உள்ள நாற்சந்தியில் 10 முதல் 12 பரப்பளவிலான பொருத்தமான காணி இனம்காணப்பட்டுள்ளது.

வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் 230 இற்கும் மேற்பட்ட ஆளணியினர் உள்ளபோதிலும், அவர்கள் ஒரே கூரையின் கீழ் கடமையாற்றவும் சுத்தமான சுகாதார காற்றைச் சுவாசிக்கவும் முடியாத நிலையில் பணியாற்றுகின்றனர்.

வாகனப் போக்குவரத்துக்கும் பெரும் நெரிசல் உள்ளது என்று குறிப்பிட்டு புதிய அலுவலகமொன்று அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 8 கோடி ரூபா செலவில் குறித்த அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. இதே வேளை மேற்படி விடயம் தொடர்பில் எதிர்காலத்தில் இடம்பெறும் பிரதேச மட்ட, மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெறுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-50)

# சுற்றுலாப் பயிற்சி நெறிகள் வடக்கில் விரைவில் ஆரம்பம்

## ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம்.

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத் துறையில் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் விருந்தோம்பல் பயிற்சிநெறிகளைத் தொடர்ச்சியாக வழங்கவுள்ளதாக மாகாண சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்குத் தனியான பிரிவு செயற்பட்டுவருகிறது. இதன் மூலமாக சுற்றுலாத் துறை சார்ந்த செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுலாத் துறையில் அதிகம் சம்பாதிக்கக் கூடிய விருந்தோம்பல் துறை தற்போது முன்னணியில் உள்ளது. ஆகவே அந்தத் துறை சார்ந்த கற்கை நெறிகளை உரிய முறையில் வழங்குவது அவசியம். இதனை அடிப்படையாகக் கொண்டு விருந்தோம்பல் வகுதிக்குள் உள்ளடங்கும் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகிறன. வருடத்துக்கு இரண்டு பயிற்சி நெறிகளை நடத்துவதற்குத் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

க.பொ.சாதாரண தரத்தில் மூன்று "சி", மூன்று "எஸ்" உள்ள மாணவர்கள் இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள முடியும். மூன்று மாதங்கள் கற்கை நெறியாகத் தற்போது வரவேற்பறை, முகாமைத்துவப் பயிற்சி நெறிகள் நடைபெற்று வருகின்றன. இதனை நிறைவுசெய்து உயர்படிப்பை முடித்த 16 பேர் தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள முன்னணி விடுதிகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

2017 ஆம் ஆண்டு அமைச்சால் 4 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவையும், 2018 ஆம் ஆண்டு 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் அமைச்சு கற்கை நெறிக்காக ஒதுக்கியுள்ளத்து. இந்த வருடமும் இந்தப் பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு அமைச்சுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதுவரையில் சுமார் 60 மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அமைச்சின் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன. இந்த வருடமும் இரண்டு பிரிவு பயிற்சி நெறிகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)

# வினா, விடை தொகுப்பு வெளியீடு

சாவகச்சேரி, பெப் 13

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களால் ஐந்தாம் தரப் புலமை பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கென உருவாக்கப்பட்ட "தென்புலரி" என்னும் வினா, விடைத் தொகுப்பு நூல் இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலயக் கல்வி பணியக மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு நிகழ்வில் நூலின் அனுசரணையாளர் சாவகச்சேரி நுணாவில் மேற்கு சுரேஷ் மோட்டர்ஸ் உரிமையாளர் சிறிஸ் கந்தராசா சுரேஷ் மதிப்பளிக்கப்படவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் தென்புலரி என்ற இந்த நூல் வலய ஆரம்ப பிரிவு ஆசிரியர்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. (ஜ-9)

# தலைக்கவசம் இன்றி மாணவரை ஏற்றிச் செல்வோருக்குத் தண்டம்!

## இருநாள்களில் 25 பேர் சிக்கினர்

சாவகச்சேரி, பெப். 13

தலைக்கவசம் அணியாமல் பாடசாலை மாணவர்களை உந்துருளிகளில் ஏற்றி வந்தவர்களுக்குப் பொலிஸாரால் சம்பவ இடத் தண்டமாக ஆயிரத்து 100 ரூபா வீதம் அறவிடப்பட்டது.

கடந்த இரண்டு நாள்களாக இது நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. சாவகச்சேரி முன்னணிப் பாடசாலைகளின் முன்பாக நிற்கும் சாவகச்சேரிப் போக்குவரத்துப் பொலிஸார் இவ்வாறு தண்டம் விதித்து வருகின்றனர். தலைக்கவசமின்றி மாணவர்களை உந்துருளியில் ஏற்றிவந்த 25க்கும் மேற்பட்டவர்களுக்கு சம்பவஇடத் தண்டம் விதித்துள்ள னர்.

சாவகச்சேரி மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பாடசாலை மாணவர்களுக்குத் தலைக் கவசம் அணியாமலேயே பெற்றோர் உறவினர்கள் பாடசாலைகளுக்கு ஏற்றி இறக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது:

" விபத்து எதிர்பார்த்து வருவதல்ல. உந்துருளியில் பயணிக்கும் அனைவரும் தலைக்கவசம் அணியவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைக்கவசமின்றி உந்துருளியில் பயணிக்கும் வேளையில திடீர் விபத்துக்க ளால் பல மாணவர்கள் காயமடைந்து வருகின்றனர்.

உந்துருளியில் பயணிப்பவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தாத வகையில் தலைக் கவசம் அணியவேண்டுமென்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

அது சட்டம். சாவகச்சேரி நகரில உள்ள முன்னணிப் பாடசாலைகளுக்கு மாணவர்களை ஏற்றிவரும் போது தலைக் கவசம் அணியவதில்லையென்ற முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதையடுத்து திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப் பட் டுள்ளது" - என்றார். (து-9)

# ஹெரோய்ன் வைத்திருந்தவருக்கு 3 வருடங்கள் ஒத்திவைத்த சிறை

யாழ்ப்பாணம், பெப். 13

ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தவருக்கு 3 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பத்துவருடங்களுக்கு ஒத்திவைத்த நீதிமன்று, 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்தது.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் 20 மில்லிக் கிராம் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுக் கைது செய்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் ஏ.எஸ்.பி.போல் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேகநபர் நீதிமன்றில் குற்றத்தை ஏற்றுக் கொண்டார். அதனையடுத்து மேற்குறித்த தண்டனை விதிக்கப் பட்டது. சந்தேக நபர் நீதிமன்றில் தனது கைவிரல் அடையாளத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிமன்று, இனிவரும் காலங்களில் இவ்வாறான குற்றத்தில் கைது செய்யப்பட்டால் 3 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் என்று எச்சரித்தார்.

(து-8)



## 56 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

வவுனியா, பெப்.13
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறுமை நிலையில் உள்ள 56 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. பாடசாலையில் 1997ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்ற பழைய மாணவர்களால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவி மேலதிக செயலர் நா. கமலதாசன், வவுனியா மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலகர் ஜே. ஜெயகெனடி, வவுனியா மாவட்ட சிறுவர் சபை அலுவலகர்கள், பாடசாலையின் பழைய மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களைக் கையளித்தனர். (ஐ)

## உலர் உணவு பொதி வழங்கல்

யாழ்ப்பாணம்,பெப். 13
புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. பொருளாதாரத்தில் நலிந்த குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கான நிதி அனுசரனையை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அருணா,அனுராதா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த வே.கணேஸ்வாரா ஆகியோர் வழங்கி வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆண்டியையா புவனேஸ்வரன் தலைமையில் அவரது உடையார்கட்டு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் உதவிப் பொருள்கள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



# கடலுணவு உற்பத்தியில் கிளிநொச்சியும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 13
கிளிநொச்சி மாவட்டத்தின் மீன்பிடி உற்பத்தியும் 2017ஆம் ஆண்டை விடவும் 2018ஆம் ஆண்டு சரிவையே சந்தித்துள்ளதாகத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னர் 4 ஆயிரத்து 113 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 801 மீனவர்கள் கடற்றொழிலை நம்பி வாழும் நிலையில் இந்தக் குடும்பங்களில் இருந்து தற்போது 3 ஆயிரத்து 784 மீனவர்களே தொழில் புரிகின்றனர். இந்த 3 ஆயிரத்து 784 மீனவர்களின் தொழிலுக்காகவும் மாவட்டம் முழுமையாக 1004 கடற்கலங்கள் உள்ளன.

இவ்வாறு வாழும் மீனவர்களின் 2018 ஆம் ஆண்டின் வாழ்வாதாரத்துக்காகவும் அவர்களின் முதலீடுகளுக்காகவும் கிடைத்த மொத்த உற்பத்தி, 10 ஆயிரத்து 471 மெற்றிக்தொன் கடல் உணவுகளே. 2017ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் உற்பத்தி 11 ஆயிரத்து 664 மெற்றிக் தொன்.

இந்த வகையில் 2017 ஆம் ஆண்டுக்கும் 2018ஆம் ஆண்டுக்கும் இடையில் ஆயிரத்து 200 வரையான மெற்றிக் தொன் உற்பத்தி மாவட்டத்தில் குறைவாகவே கிடைக்கப் பெற்றுள்ளது என்று திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கடலுணவுகளின் உற்பத்தி 2017ஆம் ஆண்டைவிட 2018ஆம் ஆண்டுவீழ்ச்சியடைந்தி ருந்தது என்று யாழ்ப்பாணத் திணைக்களத்தினர் தெரிவித்திருந்தனர். (த-105)

## மெய்வன்மை திறனாய்வு போட்டி

வவுனியா, செப்.13
வவுனியா, கனகராயன் குளம் மகா வித்தியாலயத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி ரே. கிருஸ்ணமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவன் மு.பரமநாதனும், மதிப்புறு விருந்தினராக வவுனியா வடக்கு உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் கு.செந்தில் குமரனும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-21)



## மாணவர், ஆசிரியருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு

முல்லைத்தீவு, பெப்.13
முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வருடம் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் அவர்களை வழிப்படுத்திய ஆசியர்களுக்கும் மதிப்பளிப்பு நிகழ்வும் விநாயகர் சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

முள்ளியவளை பகுதியில் அமைந்துள்ள விநாயகர் சிக்கன கடன் உதவி கூட்டுறவு சங்கத்தின் ஏற்பாட்டில் . சங்கத் தலைவர் சி.குணசிங்கம் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் முள்ளியவளை தமிழ் வித்தியாலய அதிபர் த.மோகனதாஸ் மற்றும் ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-ரி3)

## அனைத்து மக்களுக்கும் வளங்கள் சமமாகப் பகிரப்படுவது அவசியம்

*அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு*

வவுனியா,பெப்.13
கிராமம், நகரம் என்ற பாகுபாடின்றி பாடசாலைகளுக்குத் தேவையான சகல வளங்களும் சமமாகப் பங்கிடப்பட வேண்டும் என்று கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

வவுனியாதரணிக்குளம்கணேஷ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வன்மைப்போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் உள்ள மக்கள் நீண்ட காலமாக எண்ணற்ற துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வாழ்ந்தவர்கள். இவற்றை எல்லாம் தாண்டி வாழ்ந்துவரும் இவர்களுக்கு அன்றாட வாழ்விலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. வடக்கிலுள்ள மாணவர்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கிய போதும் கல்வியை கருத்துடன் கற்று வருகின்றனர். பின் தங்கிய கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, ஆளணிப்பற்றாக்குறை மற்றும் வளப்பகிர்வுகளில் குறைபாடுகள் இருக்கின்றபோதும் அந்த மாணவர்கள் பரீட்சை பெறுபேறுகளில் முதல் நிலை வகிப்பதும் தேசிய ரீதியில் சாதனை படைப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

வன்னிப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன . அதே போன்று இந்தப் பாடசாலையிலும் பல்வேறு தேவைகள் உள்ளன என்று பாடசாலை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது. இந்த பாடசாலைக்கு ரூபா 15 இலட்சத்தை ஒதுக்கீடு செய்து தருகிறேன் - என்றார்.

பாடசாலையின் அதிபர் ஆர் லிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா வடக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளர் அன்னமலர் சுரேந்திரன், பிரதேச செயலர் கா. உதயராசா, அமைச்சரின் இணைப்புச் செயலர் முத்து முஹம்மது, வவுனியா நகரசபை உறுப்பினர்களான பாரி, லரீப் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-110)



## படையினரின் வாகனம் மோதி இருவர் காயம்

முல்லைத்தீவு, பெப். 13
படையினரின் வாகனம் மோதியதில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது. முல்லைத்தீவு தண்ணீரூற்று வீதியில் மூன்றாம் கட்டைப் பாலத்தடியில் நேற்றுமுன்தினம் இது இடம்பெற்றது.

உந்துருளியில் பயணித்தவர்கள் காயமடைந்து மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி3)

## அபிவிருத்தி தொடர்பான மீளாய்வுக் கூட்டம்

கிளிநொச்சி,பெப்.13
கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலகத்தில் முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், இடம்பெறும் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் 2018,2019 வரையான முன்னேற்ற விவரங்களின் தொகுப்பு தொடர்பில் ஆராயப்படும். மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். கூட்டத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இதன்போது வெள்ளப் பாதிப்பு,இரணைமடுக் குளத்தின் தண்ணீர்த் தேவை, வீடமைப்பு, பட்டதாரிகள் வேலைவாய்ப்பு ஆகியன தொடர்பில் தலைமை அமைச்சருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால் விளக்கமளிக்கப்படவுள்ளன. (ஐ-50)

# நான்கு நாள்களாக மின்சாரம் இல்லை அறிவித்தும் நடவடிக்கை ஏதுமில்லை!

## ஸ்கந்தபுரம் மக்கள் கடும் விசனம்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் கிராமத்தின் ஒரு பகுதியில் கடந்த நான்கு நாள்களாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மின்சார சபைக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை என்று அந்தப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஸ்கந்தபுரம் கிராமத்தில் வீதியொன்றின் சீரமைப்பின் போது கனரக இயந்திரம் மூலம் வீதியின் இரு புறமும் வெட்டப்பட்டதன் காரணமாக மின்இணைப்புத் தூண்கள் சரிந்தன. இதனால் பிரதேசத்தில் மின்சாரம் கடந்த சனிக்கிழமை முதல் துண்டிக்கப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் நேற்றுவரை கிளிநொச்சி மின்சார சபைக்கு பொதுமக்களால் அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும்மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பில் கிளிநொச்சி மின்சார சபையினரிடம் தொடர்பு கொண்டு வினவிய போது, குறித்த பணிகளை மேற்கொள்கின்றோம். எங்களிடம் பாரம்தூக்கி இல்லாததன் காரணமாக கடந்த சில நாள்களாக பணிகளை மேற்கொள்ள முடியவில்லை - என்றனர். (ம-214)



சரிந்துள்ள மின்கம்பங்கள்

# மின்மோட்டர் திருடினாரென கைதானவருக்கு பிணை அனுமதி

சாவகச்சேரி, பெப். 13

கிணறுகளில் பொருத்தப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் மின் மோட்டர்களைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புத்தளத்தைச் சேர்ந்த நபர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 29 ஆம் திகதி கைதடி ஆரியபவான் வர்த்தக நிலையத்தில் உள்ள கிணற்றில் பொருத்தப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்மோட்டர் திருட்டுப் போயுள்ளதென்று வர்த்தக நிலைய உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். நுணாவிலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சகோதர இனத்தவரை அந்தப் பகுதி மக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்த நபரிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

கைதடி வர்த்தக நிலையத்தில் மின்மோட்டர் திருடியதை ஒப்புக் கொண்ட நபர் மேலும் 7 இடங்களில் மின்மோட்டர்களைத் திருடியுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.

திருடிய மின்மோட்டர்களை யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள கடையொன்றில் விற்பனை செய்திருந்தேன் என்றும் கூறியுள்ளார்.

அவரைப் பொலிஸார் குறித்த கடைக்கு அழைத்துச் சென்றிருந்தனர். தான் விற்பனை செய்த ஏழு மின்மோட்டர்களையும் காட்டியுள்ளார். திருட்டுப் பொருள்கள் எனத் தெரிந்தும் அவற்றை விலைக்கு வாங்கினார் என்ற குற்றச்சாட்டில் கடை உரிமையாளரையும் கைது செய்து மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கு கடந்த 5ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மின்மோட்டர்கள் திருடிய நபரை நேற்றுவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு கடை உரிமையாளர் இரண்டரை லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். (த-9)

# வடக்கு, கிழக்குக்குத் தாதியர் ஜூனுக்கு முன்னர் நியமனம்!

## இராஜாங்க அமைச்சர் பைசல் காசிம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 13

வரும் ஜூன் மாதம் ஆயிரத்து 500 தாதியர்கள் பயிற்சி முடித்து வெளியேறவுள்ளனர். அவர்களில் ஒரு தொகுதியினர் வடக்கு, கிழக்கு மாகாண மருத்துவமனைகளுக்கு நியமிக்கப்படவுள்ளனர் என்று சுகாதார இராஜாங்கஅமைச்சர்பைசல் காசிம் தெரிவித்துள்ளார்.



பொத்துவில் ஆதார மருத்துவமனையில் சீன நிதி உதவியில் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

தாதியர்கள் தட்டுப்பாட்டை நாங்கள் ஓரளவு தீர்த்துக் கொண்டு செல்கின்றோம். மருத்துவர்கள், மருத்துவ ஆலோசகர்கள் போன்றோருக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகிறது. இது எங்களுக்குச் சவாலாகவுள்ளது.

மகப்பேற்று நிபுணர்களுக் கான தட்டுப்பாடு நிலவுகிறது.

இது நாடு முழுவது முள்ள பிரச்சினை. பன்னாட்டுப் பயிற்சிகளுக்காகச் சென்ற மகப்பேற்று நிபுணர்கள் இன்னும் வரவில்லை. 50 பேர் பயிற்சியில் உள்ளனர். அவர்கள் வெளியேறிய பின்னர்தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்ட முடியும் - என்றார். (த)

# அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு ரூ.50,000 தண்டம்

சாவகச்சேரி, பெப். 13

தென்மராட்சி தெற்கு தனன்களப்புப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

கடந்த வருடம் நவம்பர் 12ஆம் திகதி இரவு சுற்றுக் காவல் சென்ற பொலிஸார் அந்த வழியே வந்த வாகனத்தை நிறுத்துமாறு டோர்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சினர். சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றுள்ளார். பொலிஸார் துரத்தியபோது வாகனத்தை ஓரிடத்தில் நிறுத்திவிட்டுச் சாரதி தப்பியோடியுள்ளார். மணல் ஏற்றிய நிலையில் கைவிடப்பட்ட வாகனத்தைப் பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று சாவகச்சேரிநீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

தலைமறைவாக இருந்த சாரதியைப் பொலிஸார் கடந்த 4ஆம் திகதி கைது செய்து மறுநாள் நீதிமன்றில் முற்படுத்தினர். நேற்றுவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டார். 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறின் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டிவரும் என்று உத்தரவிட்ட நீதிமன்று, மணலைப் பறிமுதல் செய்தது. (த-9)





# கற்றல் உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் புதிதாக தரம் 6 இல் இணைந்துள்ள 35 மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு அண்மையில் அதிபர் இ.பாலச்சந்திரன் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது. மக்கள் ஆதரவு மையம் எனும் அமைப்பு "கல்விக்கு தோள் கொடுப்போம்" எனும் செயற்திட்டத்தின் ஒரு கட்டமாக இந்த உதவியை வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்கான நிதியை கணக்காளரும் மக்கள் ஆதரவு மையத்தின் சிறுவர் நல திட்ட இணைப்பாளருமான சண்முகலிங்கம் சஞ்சீவ்பாபு வழங்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஜ-8)

# கிராமியக்கூட்டுறவுவங்கிகள் நாளைமுதல் கணினி மயம்!

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கிராமியக் கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் நாளைமுதல் புதிய மென்பொருளுடன் கணினி மயப்படுத்தப்படவுள்ளன என்று வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு கிராமிய வங்கிகள் கடன் வழங்கல் உட்பட பல்வேறு சேவைகளை செய்து வருகின்றன. இவை பனைதென்னை வள கூட்டுறவுச் சங்கம், மற்றும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடன் இணைந்தனவாக உள்ளன. கிராமிய வங்கிகளின் சேவைகளை வினைத்திறனாக மேற்கொள்ளுவதற்கு அவை கணினி மயப்படுத்தப்படவுள்ளன. ஆரம்பத்தில் 34 வங்கிகள் இவ்வாறு கணினி மயப்படுத்தப்பட்டன. தற்போது மேலும் 36 கூட்டுறவு கிராமிய வங்கிகளை கணினி மயப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் வதிவிட பிரதிநிதி அலுவலகம் நிதி உதவி வழங்கியுள்ளது.

இவ்வாறு 70 கூட்டுறவு கிராமிய வங்கிகள் கணினி மயப்படுத்தப்படுவதன் மூலம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்த கூட்டுறவு கிராமிய வங்கிகள் அனைத்தும் வடக்கு மாகாணத்தில் கணினி மயப்படுத்தப்படும். 36 வங்கிகளுக்கானகணினி, மென்பொருள் ஆகிய உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கு நாளையதினம் வருகை தரவுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைப்பார்.

ஒரு வங்கியை கணினி மயப்படுத்துவதற்கு சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# சமாதான நீதிவான்களாக பதவியேற்பு

யாழ்ப்பாணம், பெப்.13

வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவான்களாக உறுதிமொழி செய்து கொள்ளவுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் பதவிக்காலம் வரை நீதியமைச்சரினால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் வலி. தென்மேற்குப் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 5 கட்சிகளைச் சேர்ந்த 27 உறுப்பினர்கள் நீதியமைச்சால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டுள்ளமையை அடுத்து இவர்கள் அனைவரும் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவான்களாக உறுதிமொழி செய்துகொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-115)

# வெள்ளை வான் கடத்தல் வழமையான செயற்பாடு

## அமெரிக்கா மீது பழி போட்டு தப்ப முயலும் கோத்தபாய



கொழும்பு, பெப். 13

இலங்கையில் வெள்ளை வான் கடத்தல்களை தான் அறிமுகப்படுத்தவில்லை என்றும், அமெரிக்காவே அதனை இலங்கையில் அறிமுகப்படுத்தியது என்றும் குற்றம் சாட்டியுள்ளார், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலரும், மகிந்தவின் சகோதரனும், அமெரிக்கக் குடியுரிமை உள்ளவருமான கோத்தபாய ராஜபக்ச. இது பன்னாடுகளில் உள்ள வழமையான ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

செப்ரெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர், பன்னாடுகள் எங்கும் உள்ள தீவிரவாதிகளை அமெரிக்கா தேடிப்பிடித்து. குவான்டனாமோ தளத்துக்குக் கொண்டு சென்றது. அப்போது மலேசியர் ஒருவர் இலங்கையில் இருந்தார். அமெரிக்காவின் எவ்.பி.ஐ அவரைத் தேடிப்பிடித்தது. இங்கிருந்து கொண்டு செல்வதற்கு, நிறைய விடயங்களைச் செய்தார்கள். அவரிடம் ஒரு கடவுச்சீட்டைக் கொடுத்து இங்குள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அவரை அவர்கள் அனுமதிக்கச் செய்தனர். பின்னர் அவரை இலங்கையிலிருந்து வெளியேற்றினர்.

### தமது ஆட்சிக்கு முன்னரே உள்ளது

அதற்கு அவர்கள் வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றவில்லை. இது, நாங்கள் அரசைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் நடந்தது. இலங்கையில் அல்லது வேறெங்கும் உள்ள புலனாய்வு அமைப்புகள், தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளுக்குக் குறிப்பிட்ட சில வழிமுறைகளைப் பின்பற்றுகின்றன. இலங்கையிலும்கூட, அவர்கள் இந்த வழிமுறைகளில் சிலவற்றை நீண்டகாலமாகப் பின்பற்றுகிறார்கள். போரின் போது மாத்திரமன்றி, ஜே.வி.பி கிளர்ச்சியின் போதுகூட அவர்கள் இவற்றைப் பின்பற்றினர். சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் அத்தகையதொரு வழிமுறையில் விசாரணைக்குக் கொண்டு செல்லப்படுவார். இது என்னால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. இந்த வழிமுறை பன்னாடுகள் எங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று.

எமது புலனாய்வு அமைப்புகள் பயன்படுத்திய மூடுந்து வாகனங்கள், வெள்ளை நிறமுடையவை என்பதால், 'வெள்ளை வான்' என அழைக்கப்பட்டிருக்கலாம். அதனை நான் அறிமுகப்படுத்தவில்லை. அதற்கு முன்பிருந்த அரசுகளின் கீழும் அது நடந்தது.

### 'சாக்குப் பை' கதைகள் எல்லோருக்கும் தெரியும்

ஜே.வி.பி வன்முறைக்காலத்தில், இளைஞர்கள் அடையாளம் தெரியாதவர்களால் எப்படி துடைத்தழிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். 'சாக்குப் பை' கதைகள் எல்லோருக்கும் தெரியும். ஆனாலும், நான் ஏன் குறிவைக்கப்படுகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை.

1988 / 89 காலப்பகுதியைப் போன்று, எமது ஆட்சிக்காலத்தில் அரசியல் எதிராளிகள் எவரும், கடத்தப்படவில்லை. அந்த நேரத்தில் என்ன நடந்தது என்று 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆபத்தான தீவிரவாதிகளுக்கு எதிரான செயற்பாடுகள் தான் எமது காலத்தில் இடம்பெற்றன.

2005இல் விடுதலைப் புலிகள் தெற்கில் பெரும் வலையமைப்பு ஒன்றைக் கொண்டிருந்தனர். அவர்கள் பெரியளவில் தென்பகுதியில் ஊடுருவியிருந்தார்கள். அதனால், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தினரைக் கொல்ல முடிந்தது.

நாடு முழுவதும் அவர்கள் போரிட்டார்கள். அவர்கள் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் பல இடங்களில் புலனாய்வு வலையமைப்பையும், ஆயுதக் களஞ்சியங்களையும் கொண்டிருந்தார்கள்.

### வழக்கமான நடைமுறைகளை பின்பற்ற முடியாது

நாங்கள் தற்கொலைப் போராளிகளையும், உளவாளிகளையும் கண்டறிய வேண்டியிருந்தது. தீவிரவாதத்துக்கு எதிராகப் போரிடும்போது, வழக்கமான நடைமுறைகளைப் பின்பற்றிக் கொண்டிருக்க முடியாது.

அவர்கள் இரகசியமான கரந்தடி முறையைப் பின்பற்றி வித்தியாசமான முறையில் போரிட்டுக் கொண்டிருந்தனர். நாங்களும் அதுபோன்ற வழியிலேயே முறியடிக்க வேண்டியிருந்தது.

புலனாய்வு அமைப்புகள் செயற்படுவதற்கு அதுவே வழியாக இருந்தது. எனினும், ஐ.தே.கவின் பரப்புரைகள் அனைத்தும் என் மீது தான் உள்ளன என்று தெரிவித்துள்ளார். (த)

# வடக்குக்கும், கிழக்குக்கும் என இரு சட்டங்கள் இருக்க முடியாது!

## யோகேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு



செங்கலடி, பெப். 13

வடக்கு மாகாணத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்குக் கட்டம் கட்டமாக அரச நியமனங்கள் வழங்கப்படும்போது கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். தொண்டர் ஆசிரியர் தொடர்பில் வடக்கு மாகாணத்துக்கு ஒரு சட்டம் கிழக்கு மாகாணத்துக்கு மற்றுமொரு சட்டம் இருக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்குட்பட்ட சிங்கபாரதோப்பு சரஸ்வதி வித்தியாலய வருடாந்த மெய் வன்மைப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் செய்த தவறு காரணமாக கல்குடா மற்றும் மட்டக்களப்பு மேற்கு ஆசிரியர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர். இந்த விடயம் தொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநர், மற்றும் கொழும்பு அரசின் கல்வி அமைச்சரோடு பேசவுள்ளோம். ஆசிரியர் பற்றாக்குறையோடு தொடர்ந்தும் பாடசாலைகள் இயங்க முடியாது.

கடந்த மாகாணசபை ஆட்சியில் கல்வி அமைச்சு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தது. ஆனால் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருந்தன. புதிய அரசமைப்பின் மூலமாக மாகாணசபைகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிய 445 தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நியமனம் வழங்க வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனைச் சந்தித்துக் கேட்டுள்ளோம். வடக்கு மாகாணத்தில் இரண்டு தடவை தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. வடக்கு மாகாணத்துக்கு ஒரு சட்டம் கிழக்கு மாகாணத்துக்கு வேறொரு சட்டம் இருக்கமுடியாது - என்றார். (த)



## கிழக்கு ஆளுநர் அலுவலக பராமரிப்பு செலவின் 75 சதவீதம் மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், பெப். 13

கிழக்கு மாகாண ஆளுநர் மாளிகையைப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்படும் நிதியில் 75 வீதத்தை தந்தையரை இழந்த ஏழை மாணவர்களின் கல்விச் செலவுகளுக்கு பகிர்ந்தளிக்குமாறு அந்த மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா பணித்துள்ளார்.

மாகாண நிதி, திட்டமிடல், கல்வி மற்றும் சமூக சேவைகள் அமைச்சுக்களின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் பின்னர் ஆளுநர் மேற்கண்டவாறு பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆளுநர் மாளிகைப் பராமரிப்புக்காக ஒவ்வொரு வருடமும் 20 மில்லியன் ரூபாவை கிழக்கு மாகாண சபை ஒதுக்கீடு செய்து வருகின்றது. அதில் 5 மில்லியன் ரூபாவைக் கைவசம் வைத்துக் கொண்டு மிகுதி 15 மில்லியன் ரூபாவை மாணவர்களுக்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாகாணப் பாடசாலைகளில் தரம் 1 தொடக்கம் 5 வரை கற்கின்ற, தந்தையரை இழந்த மாணவர்களுக்கு, மாதம்தோறும் 500 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்குமாறு பணித்துள்ளார். இந்த வரையறைக்குள் 2ஆயிரத்து 500 மாணவர்கள் இருப்பார்கள் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதைவிட அதிகமான மாணவர்கள் இருப்பார்களாயின், திறைசேரியுடன் பேசி மேலதிக நிதி பெற்று மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## எமில் ரஞ்சனுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.13

முன்னாள் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சனை மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தொடர்ந்து விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்தனர். அடுத்த வழக்குத் தவணையில் விசாரணைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் 27 சிறைக் கைதிகள் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எமில் ரஞ்சன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

# இந்து ஆலயங்கள், காணிகளை திருட முயல்வதை ஏற்க முடியாது

## அமைச்சர் மனோ கணேசன் இடித்துரைப்பு

கொழும்பு, பெப். 13

இந்துக் கடவுளர்களை ஏனைய மத சகோதரர்கள் வணங்கி அருள் பெறுவது நல்ல விடயம். ஆனால் அதன்மூலம் எங்கள் கடவுளர்களையும், ஆலயங்களையும், ஆலயக் காணிகளையும் ஆக்கிரமித்து திருட முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதது. இவற்றை அவர்கள் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு, இந்து சமய விவகார அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அதிகாரிகள்பொது மக்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவரது கட்சி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்து மத நடவடிக்கைகளை தேசிய, மாவட்ட மட்டங்களில் கூட்டிணைக்கும் நோக்கில் 'இலங்கை தேசிய இந்து மகா சபை' என்ற பொறிமுறை உருவாக்கப்படும். இதற்குள் தேசிய வழிநடத்தல் குழு அமைக்கப்படுவதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இலங்கைத் தேசிய இந்து மகா சபையின் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்படும்.

இந்தப் பொறிமுறை ஆங்கிலத்தில் 'நேஷனல் ஹிந்து கவுன்சில் ஒவ் சிறிலங்கா' என்று அழைக்கப்படும்.

**தேசிய அனுமதி**

எமது மத குருமார்களுக்கு அவர்களது தகமைகளுக்கு ஏற்ப தேசியரீதியாக அனுமதியும் இந்து குருமார் என்ற தேசியரீதியான பொது அடையாளமும் வேண்டும். இந்து பாமர மக்கள் ஏழ்மை, வறுமை காரணமாக மதம் மாறுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அறநெறிக் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டும். ஒட்டுமொத்த மத வளர்ச்சியில் ஆலய அறங்காவலர்களின் பங்களிப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும். இந்து பொது அமைப்புகள் மற்றும் இளையோர் சங்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு, மத வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் அவற்றின் பங்களிப்புகளுக்கு உரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

இந்து மதகுருமார்கள், இந்து ஆலய அறங்காவலர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், இந்து சைவ மத மன்றங்கள் இளையோர் சங்கங்கள் ஆகிய நான்கு தூண்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இந்த தூண்களைக் கொண்டு அமைச்சு அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி, இவற்றைச் செய்வேன் என்றார் - என்றுள்ளது. (த)

# பெரமுனவைச் சேர்ந்தவரே தேர்தலில் களமிறங்குவார்

## பசில் ராஜபக்ச திட்டவட்டம்



கொழும்பு, பெப். 13

அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினரையே நிறுத்துவோம். மொட்டு சின்னத்திலேயே போட்டியிடுவோம்.

இவ்வாறு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் கம்பகா மாவட்ட உள்ளூராட்சி உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், அரசதலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார் என்று கூறுகின்றனரே என்று பொதுமக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

பொதுமக்கள் முன்னணி உறுப்பினர் அல்லாத வேட்பாளரை எந்தச் சூழ்நிலையிலும், ஆதரிக்கமாட்டோம். எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவது, வாக்காளர்களின் மனதில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனை ஏனைய அரசியல் கட்சிகள் தமது நலனுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதற்குப் பதிலளிக்கும் போதே பசில் ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

கட்சிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கட்சி உறுப்பினர்களின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு முடிவும் எடுக்கப்படாது. முன்னணி கிராமங்களிலிருந்தே கட்டியெழுப்பப்பட்டது. கட்சிக்கென்று தலைவர்கள் உருவாக முன்னரே, வாக்காளர்களால் கட்டியெழுப்பப்பட்ட அரசியல்கட்சி இது. எனவே கட்சியின் முடிவுகள் அனைத்தும் உறுப்பினர்களின் விருப்பத்துக்கு அமையவே எடுக்கப்படும்.

கட்சியின் தலைவர்களை விட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒரு கட்சியாக முன்னணி செயற்படும். வெளிப்படைத் தன்மையுடன் உறுப்பினர்களுக்குத் துரோகம் செய்யாமல் கட்சி செயற்படும். உறுப்பினர்கள் அங்கீகரிக்காத எவருக்குமே ஆதரவு அளிக்குமாறு முன்னணியின் உறுப்பினர்களிடம், கட்சித்தலைமைஒருபோதும் கேட்காது. - என்றார். (த)

# ஐ.தே.கட்சி எம்.பியை கைது செய்ய சபாநாயகர் அனுமதி



கொழும்பு, பெப். 13

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியைக் கைது செய்வதற்கு சபாநாயகர் கருஜயசூரிய நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளார் என்று பண்டாரவளை மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் அதிகாரி கோவிந்தபிள்ளை தில்சான் சிவராஜா மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதி ஏற்கனவே கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். காயமடைந்த பொலிஸ் அதிகாரி பண்டாரவளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

இதேவேளை, குறித்த பொலிஸ் அதிகாரி பயணித்த வாகனத்திலிருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ மெதவத்தையின் பாதுகாப்புப் பொலிஸ் அலுவலர் தன்னைத் தாக்கினார் என்றுகூறி நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதியான பந்துல ரட்னாயக்க பதுளை அரசினர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் குறித்து ஆராய பதுளை நீதிவான் மன்ற நீதிவான் பதுளை மருத்துவமனைக்குச் சென்று நாடாளுமன்ற உறுப்பினரின் சாரதியை அவதானித்து எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். அவர் சிகிச்சை பெற்று வருவதால் அங்கிருந்து தப்பிச் செல்லாதவாறு பாதுகாப்பு ஏற்படுத்தும்படி நீதிவான் பொலிஸாருக்குப் பணித்தார்.

போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவுக்குப் பொறுப்பாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ மெதவத்தையின் தாயார் தியத்தலாவை அரசினர் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவருக்கு தேவைப்படும் ஊசி மருந்து மருத்துவமனையில் இல்லாததால் அந்த மருந்தை பண்டாரவளையில் எடுத்துக்கொண்டு தியத்தலாவைக்குப் பொலிஸ் வாகனத்தில் திரும்பியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிரி பயணித்த வாகனத்துக்கு பொலிஸ் வாகனம் வழிவிடாத காரணத்தால் வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டது என்றும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பொலிஸ் அதிகாரிக்குமிடையே தர்க்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பண்டாரவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்தன ஜயதிலக்க தெரிவித்தார். (த)

# அரச தலைவர் தேர்தலில் ராஜபக்சவினரே வெல்வர்

## பவித்திரா எம்.பி. நம்பிக்கை

கொழும்பு, பெப். 13

அடுத்த அரசதலைவர் தேர்தலில் ராஜபக்சவினரில் ஒருவரே வெற்றிபெறுவார் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.



சிறிலங்கா பொதுமக்கள் மகளிர் முன்னணியின் தொகுதிச் செயற்குழுக் கூட்டம் திஸ்ஸமஹாராமவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தலைமையில் அது நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் பவித்திரா வன்னியாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அடுத்த அரசதலைவர் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியில் யார் வேட்பாளராகக் களமிறங்கினாலும் அவர்கள் தோல்வியடைவது உறுதி" என்று பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். (த)





# தாதிய அலுவலர் இறப்புத் தொடர்பில் உரிய விசாரணை கோரிப் போராட்டம்

ஹற்றன், பெப். 13

தனியார் மருத்துவமனையில் தாதிய அலுவலர் சடலமாக மீட்கப்பட்டமைக்கு அந்த மருத்துவமனையின் நிர்வாகியும் அவரது மனைவியும் காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அது குறித்து உரிய விசாரணை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது. ஹற்றன் நகரசபைக்கு முன்பாக ஹற்றன் சிவில் அமைப்புகள் போராட்டம் நடத்தினர்.

ஹற்றன் நகரில் இயங்கி வரும் தனியார் மருத்துவமனையில் கடந்த 28ஆம் திகதி தாதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். தலவாக்கலை வட்டகொடை ஒக்ஸ்போட் பகுதி தாதிய அலுவலரே சடலமாக மீட்கப்பட்டிருந்தார். குற்றச்சாட்டு விடயத்தை நீதிவானின் கவனத்துக்கும் கொண்டுவரும் வகையில் பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் நேற்றுக் கவனவீர்ப்பு நடத்தப்பட்டது.

தாதிய அலுவலர், தவறான முடிவெடுத்து அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு உயிர்மாய்த்துள்ளார். அதற்குக் காரணம் அந்த மருத்தவமனை உரிமையாளரான மருத்துவரும் அவரின் மனைவியுமே என்று தனது பெற்றோருக்கு வாட்சப் மூலமாக தாதி உயிர் மாய்க்க முன்னர் தெரிவித்துள்ளார்.

இந்த தகவல் வலைத்தளங்களில் பரவலாக பேசப்பட்டது. ஆனால் தாதியின் இறப்புத் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. தாதி இறப்புத் தொடர்பில் விசாரணை நடத்தப்படவில்லை என்றும் சிவில் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டு கின்றன.

தாதி இறப்புக்கு உரிய விசாரணை நீதியாக இடம்பெற வேண்டும், குற்றவாளிகள் கைது செய்யப்படவேண்டும், தாதியின் குடும்பத்தினருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையில் நீதிவான் நீதிமன்றுக்குச் செல்லும் வழியில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். (த)

> தாதிய அலுவலர், தவறான முடிவெடுத்து அதிகளவான மாத்திரைகளை உட்கொண்டு உயிர்மாய்த்துள்ளார். அதற்குக் காரணம் அந்த மருத்தவமனை உரிமையாளரான மருத்துவரும் அவரின் மனைவியுமே என்று தனது பெற்றோருக்கு வாட்சப் மூலமாக தாதி உயிர் மாய்க்க முன்னர் தெரிவித்துள்ளார்.

# பாதாளக் குழுக்களின் பின்னால் அரசியல்வாதிகள் உள்ளனர்

## உதயகம்பன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 13

அனைத்து பாதாள உலகக்குழுத் தலைவர்களினதும் பின்னணியில் ஒவ்வொரு அரசியல்வாதிகள் செயற்படுகிறனர் என்று தூய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளின் ஆதரவும், பொலிஸாரின் பாதுகாப்பும் இன்றி உலகில் எந்தவொரு நாட்டிலும் பாதாள உலகக் குழுவொன்று நிலைத்திருக்க முடியாது. ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னாலும் பெண்கள் காணப்படு வதுபோல, ஒவ்வொரு பாதாள உலகக்குழுத் தலைவரதும் பின்னணியிலும் ஒரு அரசியல்வாதி செயற்படுவார். எனவே, பாதாள உலகக்குழுவினருக்கு உதவி புரிந்த, ஆதரவளித்தவர்கள் காணப்படின் அவர்கள் கட்சி அந்தஸ்துப் பாராது தண்டிக்கப்பட வேண்டும்.

எம்மிடம் அது தொடர்பான தகவல்கள் இல்லை. அரசிடமே இவர்கள் தொடர்பான தகவல்கள் காணப்படுகின்றன. எனவே, அவ்வாறானவர்கள் காணப்படின் உடனடியாக அவர்களுக்கு எதிராக நாட்டின் நீதியை பிரயோகியுங்கள். என்றார். (த)

# பிரான்ஸ் தீவுகளுக்கு அருகில் 72 இலங்கையர்களுடன் படகு!

## படகு உரிமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, பெப். 13

பெருமளவு இலங்கையர்களை ஏற்றிய கப்பல் ஒன்று பிரான்ஸுக்குச் சொந்தமான தீவான ரீயூனியனை நெருங்கியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. பெண்கள், சிறுவர்கள் உள்பட 72 இலங்கையர்கள் இந்த கப்பலில் பயணிக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது. இலங்கைக் கப்பலுடன் சென்ற கப்பலோட்டி, கடத்தலில் ஈடுபடுகிறார் என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்திலிருந்து பிரான்ஸ் தீவை நோக்கிப் பயணித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி நீர்கொழும்பில் இருந்து பயணத்தை ஆரம்பித்த கப்பல், 25 நாள்களுக்குள் ரீயூனியன் தீவை நெருங்கியுள்ளது. சிலாபம் மீன் வர்த்தகரான சுதர்ஷன் பெரேரா என்பவருக்குச் சொந்தமான கப்பலை மஹவெவ பகுதியைச் சேர்ந்த பெர்னாண்டோ என்பவர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தக் கப்பலை ஓட்டியவர் ஆள்கடத்தும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார் என்று கப்பல் உரிமையாளர் நீர்கொழும்பு பொலிஸ் மற்றும் குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த மாதம் 9ஆம் திகதி கப்பல் உரிமையாளர் தேவையான உணவு மற்றும் ஐஸ் ஆகியவற்றை வழங்கி மீன் பிடிக்க அனுப்பியுள்ளார். இதன் பின்னரே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கப்பலில் பயணித்தவர்களிடம் 6 முதல் 8 லட்சம் ரூபாவரை பணம் சேகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளை அண்மித்த தீவுகளுக்குப் பலர் சென்றமையும் பின்னர் பிடிபட்டமையும், சிலர் காணாமற்போனமையும் சிலர் திருப்பி அனுப்பப்பட்டும் வருகின்றனர். (த)

## நாய்களுக்கான கண்காட்சி...





இங்கிலாந்தின் வெஸ்ட் மினிஸ்டர் பகுதியில் வருடாவருடம் நாய்களுக்கான கண்காட்சி நடத்தப்படுவதுண்டு. இந்த வருடத்துக்கான கண்காட்சி கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது. நூற்றுக் கணக்கான நாய்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. (ம)

## மூன்றே நிமிடத்தில் மணமுறிவு

குவைத்சிட்டி, பெப்.13

குவைத்தில் திருமணமான மூன்றே நிமிடங்களில் புதுமணத் தம்பதியினர் மணமுறிவு பெற்றமை விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. குவைத்தைச் சேர்ந்த ஒரு சோடி கடந்த சில நாள்களுக்கு முன்னர், நீதிபதி யின் முன்னால் பதிவுத் திருமணம் செய்துகொண்டனர். அப்போது புதுமணத் தம்பதி இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் கணவர், மனைவியை 'முட்டாள்' என்று திட்டினார் என்று கூறப்படுகிறது. இதில் கோபமடைந்த மனைவி, திருமணத்தை நடத்தி வைத்த நீதிபதியிடமே, மணமுறிவு செய்யுமாறு கூறியுள்ளார். இதனால் திருமண ஒப்பந்தம் முறிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் அவர்கள் 3 நிமிடங்கள் மட்டுமே திருமண பந்தத்தில் இருந்தனர். இது குவைத் வரலாற்றில் முதல் முறை என்று கூறப்படுகிறது. (ம)



## மிகவும் விரைவில் சிறை செல்வார் டொனால்ட் ட்ரம்ப்

### செனற் உறுப்பினர் சீண்டல்

வோஷிங்டன், பெப்.13

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் சிறைக்குச் செல்வார் என்று செனற் சபை உறுப்பினர் எலிசபெத் தெரிவித்தார். அமெரிக்காவில் அடுத்த ஆண்டு (2020) அரச தலைவர் தேர்தல் நடக்க உள்ளது. இதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளருக்கான களத்தில் மூத்த செனட் சபை உறுப்பினர் எலிசபெத் வாரன் உள்ளார். இதற்காக அவர் ஜனநாயக கட்சியினரிடையே பரப்புரையில் ஈடுபட்டு வருகிறார். அந்த வகை யில் நேற்றுமுன்தினம் அயோவா மாகாணத்தில் ஜனநாயக கட்சியினரை சந்தித்து பேசினார். அப்போது அவர், 'அரச தலைவர் டிரம்ப் தனது பதவி காலத்தில் முழுமையாக பணியாற்ற மாட்டார்.

2020ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக அவர் சிறைக்குச் செல்வார்.

இனவெறி மற்றும் வெறுப்புணர்வை தூண்டும் வகையில் தினந்தோறும் கீச்சகத்தில் கருத்துகளை ட்ரம்ப் பதிவிடுகிறார். உண்மையில் அந்த கருத்துகள் மிகவும் மோசமானவை. மக்கள் அந்தப் பதிவுகளை நம்பி ஏமாறக்கூடாது' என்று எலிசபெத் தெரிவித்தார். (ம)

## மெக்சிக்கோவில்
# பாலியல் குற்றங்களுக்காக 152 பாதிரியார்கள் நீக்கம்!



மெக்சிக்கன் சிற்றி, பெப். 13

தென் அமெரிக்க நாடான மெக்சிக்கோவில், கடந்த 9 ஆண்டுகளில் சிறார்களுக்கு எதிரான பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 152 பாதிரியார்களை இடைநீக்கம் செய்து நடவடிக்கை எடுத்துள்ளது வத்திக்கான்.

இந்த விடயம் தொடர்பில் மெக்சிக்கோவில் உள்ள பேராயர் ஒருவர் தெரிவித்ததாவது:

"கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இடைநீக்கம் செய்யப்பட்ட 152 பாதிரியார்களில் சிலருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெருமளவானவர்கள் சிறார்களுக்கு எதிரான பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டவர்கள்" என்றார். கத்தோலிக்க திருச்சபையில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் பாப்பரசர் பிரான்சிஸ்.

அதேபோல் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தற்போது திருச்சபைக்குள் பாலியல் குற்றச்சாட்டுக்கள் குவிந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## கண்டுகொள்ளப்படவில்லை ஹிட்லரின் ஓவியம்!

ஜெர்மனியின் சர்வாதிகாரி ஹிட்லர் வரைந்த ஓவியம் ஒன்று ஏலத்தில் விலைபோகாத சம்பவம் நடந்துள்ளது.

ஜெர்மனியின் சர்வாதிகாரியாக விளங்கியவரும், யூத மக்களைக் கூட்டமாக அழித்து இனப்படுகொலை நிகழ்த்தியவருமான அடொல்ப் ஹிட்லர் ஓவியம் வரைவதிலும் வல்லவராக இருந்தவர். முதலாம் உலகப்போருக்கு முன்னர் வரை வறுமையின் பிடியில் இருந்த ஹிட்லர் 2 ஆயிரம் ஓவியங்கள் வரை வரைந்தார்.

ஹிட்லர் வரைந்த ஓவியங்கள் பிரபல ஏல நிறுவனங்களால் உலகின் பல்வேறு இடங்களில் ஏலத்துக்கு விடப்படும். அந்த வகையில் ஜெர்மனியின் நுரம்பெர்க் நகரில் நடத்தப்பட்ட ஏலத்தில் வாடிக்கையாளர்களால் ஹிட்லரின் படம் ஏலத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதுகுறித்து ஜெர்மனி பத்திரிகை ஒன்று வெளியிட்ட செய்தியில், "ஹிட்லர் வரைந்த அந்த ஓவியம் விலைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த ஓவியத்தின் ஆரம்ப விலை 21 ஆயிரத்து 500 டொலராக இருந்தது" என்று செய்தி வெளியிட்டுள்ளது.




## பாகுஸ் கிராமத்தில் பலமுனைத் தாக்குதல்





டமஸ்கஸ், பெப். 13

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ள சிரியாவின் இறுதிப் பகுதியான பாகுஸ் கிராமத்தை மீட்பதற்கு அங்கு அமெரிக்கக் கூட்டுப்படைகள் கடும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக், சிரிய ஆகிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனிநாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து கடந்த வருடம் மீட்கப்பட்டது ஈராக். எனினும் சிரியாவில் தொடர்ந்தும் ஐ.எஸ். ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்த நிலையில், சிரியாவில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டு விட்டது. எனினும் இந்த அறிவிப்பை உத்தியோகபூர்வமாக வெளியிட இன்னும் ஒரு வாரகாலம் தேவைப்படும் என்று கடந்த வாரம் அறிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

இதையடுத்து பாகுஸ் கிராமத்தில் தற்போது கடும் தாக்குதலை ஆரம்பித்துள்ளது அமெரிக்கக் கூட்டுப்படை. நேற்றையதினம் வான்வழியாகவும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என்று பன்னாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. (ம)

# இலக்கியத்தில் முதன்முதலில் எழுதப்பட்ட காதல் கடிதங்கள்

இராமபுரத்தூர் நிஷாந்தன்



மனித வாழ்வியலின் ஓர் அற்புதமான சாரம் காதல் எனலாம். மனம் ஒருமித்த ஓர் ஆணும், பெண்ணும் தமக்குள் வெளிப்படுத்தும் ஆழமான அன்பினைக் காதல் எனலாம். அது இரு இதயங்கள் பேசிக் கொள்ளும் அற்புதமான பிணைப்பு. அந்த இருவர் மட்டும் அனுபவிக்கும் ஓர் இன்பமான துன்பம் காதல். இப்படி காதல் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். இரு உள்ளங்களால் பிணைக்கப்பட்ட காதலர்கள் தம் உள்ளத்தில் எழும் உணர்வுகளை வெளிப்படுத்திட இன்று பல நவீன தொடர்பாடல் சாதனங்கள் இருந்தாலும், முன்னைய காலத்தில் காதலர்கள் எழுதிய காதல் கடிதங்களே என்றும் சிறப்புடையவை எனலாம். ஆம். கடிதம் வாயிலாக ஒருவருக்கொருவர் தம் அன்பினை வார்த்தைகளாக்கி அதை மடலில் எழுதி அதை தம் மனம் விரும்பியவரிடத்து அனுப்பி பின் அதற்கான பதில் மடல் வரும் வரை காத்திருந்து அது கிடைத்ததும் அடையும் மனத்திருப்தி, மனமகிழ்ச்சி இவை என்றும் இனிமையானவையே. ஆனால் இன்று காதல் கடிதங்கள் எல்லாம் எங்கோ மறைந்து போய்விட்டனவோ? என்று எண்ணத் தோன்றுகின்றது.

**இலக்கியம் கண்ட காதல் கடிதங்கள்**

மனித வாழ்வியல் யாதென்பதை நாம் இலக்கியங்கள் வாயிலாகவே அறிந்து கொள்கின்றோம். இலக்கியம் பேசிய முதல் பாடுபொருள் இந்தக் காதலே என்றால் மிகையில்லை. ஆக, காதலில் எழுதப்பட்ட காதல் கடிதங்கள் குறித்தும் நம் இலக்கியங்களிலேயே சான்றுகள் உள்ளன. காதல் கொண்ட காதலர்கள் முதன் முதலாக எழுதிய காதல் கடிதங்கள் நம் இலக்கியங்களிலேயே எழுதப்பட்டுள்ளன என்பதை அறிவீர்களா? ஆம். அவ்வாறு இரண்டு கடிதங்கள் இலக்கியங்களில் எழுதப்பட்டுள்ளன. ஒன்று பாகவத புராணத்தில். ருக்மணி கண்ணனுக்கு எழுதிய காதல் கடிதம். இரண்டாவது சிலப்பதி காரத்தில் மாதவி கோவலனுக்கு எழுதிய காதல் மடல். ஆகவே இவ்விரு காதல் கடிதங்கள் தரித்துள்ள கருத்தாடல் குறித்து இங்கு நோக்குதல் சிறப்புடையதாகும்.

**ருக்குமணி கண்ணனுக்கு எழுதிய காதல் கடிதம்**

இலக்கிய உலகில் எழுதப்பட்ட முதலாவது காதல் கடிதம் குறித்த கருத்தாடலை ஸ்ரீமத் பாகவதமே காப்பியம் செய்கின்றது. கண்ணபிரானுக்கு ருக்மணிதேவி எழுதிய அனுப்பிய கடிதமே அந்தக் காதல் கடிதமாகும். கண்ணன் துவாரகையில் அரசனாக ஆட்சி செய்து வருகின்றான். விதர்ப்பம் எனும் நாட்டின் மன்னன் பீஷ்மகன். அவனுக்கு ஐந்து ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் இருந்தனர். அந்த ஒரு பெண் பிள்ளையே ருக்மணி. மகாலட்சுமியின் அவதார அம்சமாக நிலவுலகில் அவதரித்திருந்தவள் அவள். அழகு எனும் சொல்லின் அர்த்தமானவள் அவள். அவளது மூத்த அண்ணன் பெயர் ருக்மி என்பதாகும். அவனோ தன் தங்கை ருக்மணியை சிந்து நாட்டின் அரசன் சிசுபாலன் என்பானுக்கு மணம் செய்து கொடுக்க முடி வெடுத்திருந்தான்.

இது இவ்வாறு இருக்க, ருக்மணியோ கண்ணன் மீது அழமான அன்பினைக் கொண்டிருந்தாள். ஆனாள் அவள் கண்ணனை நேரில் கண்டதே இல்லை. கண்ணனின் அழகு, மற்றும் அவன் பெருமைகள், அற்புத மகிமைகளை கேண்மையுற்றே அவன் மீது மையலுற்று கண்ணனையே தன் இதயத்தில் இருத்திக் கொண்டாள் இந்த ருக்மணி. கண்ணனே தன் கரம் பற்றிட வேண்டும் எனவும் விரும்பம் கொண்டிருந்தாள். ஆனால் தன் அண்ணன் ருக்மியின் முடிவினால் மனக்கலக்கம் கொண்ட ருக்மணி தன் மன விருப்பத்தினையும், தன் ஆழமான காதல் வெளிப்பாட்டினையும் கண்ணனிடம் எடுத்துரைத்திட முடிவு செய்தாள். அதன் படி தன் உள்ளத்து உணர்வுகளை ஒரு மடலாக வரைந்திட முடிவு செய்து காதல் உள்ளத்துடன் கடிதம் எழுதத் தொடங்கினாள். அவ்வாறு ருக்மணி பின்வருமாறு தன் காதல் மடலை வரைகின்றாள். கிருஷ்ணரே, உமது நற்குணங்களையும், காண்பவர் ஆசை கொள்ளும் உமது அழகைப் பற்றியும் கேண்மையுற்று வெட்கமுற்ற என் மனம் உம்மிடம் சென்று விட்டது. மேலும், மாதவா, குலம், குணம், அழகு, அறிவு, இளமை, செல்வம், மற்றும் செல்வாக்கு ஆகிய இவற்றில் உமக்கு இணையானவர் வேறு யாருளர். நல்ல குலத்தில் பிறந்த எந்தப் பெண் தான் தம்மை விரும்பாது இருப்பாள்? எனவே எனது பிரியமுள்ள பகவானே, உங்களை என் கணவனாகத் தேர்ந்தெடுத்துள்ள நான் என்னையே தங்களிடம் அர்ப்பணிக்கின்றேன். சர்வ வல்லமை உடையவரே, தயவு செய்து விரைந்து வந்து என்னை உங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

மேலும் ருக்மணி கூறு கின்றாள், தாமரைக் கண்ணரே, சிங்கத்தின் இரையை காட்டு நரி கவர்ந்து செல்வதைப் போல நீங்கள் அடைய வேண்டிய என்னை அந்த சிசுபாலன் தீண்டிட அனுமதியாதீர்கள். நான் வேள்விகள், தானங்கள், விரதங்கள் முதலியவற்றைக் கடைப்பிடித்து பெரியோர்களையும், அந்தர்ணர்களையும், புஜித்தும், பகவானாகிய இறைவனை பக்தியோடு வழிபட்டிருக்கின்றேன் எனில் தாம் வந்து என் கரங்களை பற்றிட வேண்டும். கிருஷ்ணரே, திருமண நாளன்று எனக்கான திருமணச் சடங்குகள் தொடங்கும் போது தாம் தம் சேனையோடு என் நாட்டிற்கு வந்து என் அண்ணன் படையோடு துணையாக இருக்கும் மற்றைய படை வலிமையை அழித்து என்னை வென்று விரைந்து இராட்சஸ விவாகம் செய்திட வேண்டும். மேலும், என்னை எவ்வாறு கடத்திச் செல்ல முடியும் என தாம் கருதக் கூடும். அதற்கொரு உபாயம் கூறுகின்றேன். திருமணத்துக்கு முதல் நாள் மணமகள் ஆடம்பரமாக ஊர்வலத்துடன் நகரின் வெளியில் உள்ள கௌரியம்மன் ஆலயத்திற்கு வழிபாடியற்றப் போவதுண்டு. அதன் படி நான் கௌரியம்மன் ஆலயத்திற்கு சென்று அங்கே தம் வருகைக்காக காத்திருப்பேன். அந்தச் சந்தர்ப்பத்தில் தாம் அங்கே வந்து என்னை அழைத்துச் சென்றிட வேண்டும்.

மாதவரே, தங்களது பெரும் கருணையை நான் பெற விரும்புகின்றேன். அவ்வாறு தங்களின் கருணை எனக்கு கிடைக்கவில்லை எனில் அதாவது தாம் என்னை ஏற்றுக் கொள்ளாது விடின் என் உடலை மெலியச் செய்து என் உயிரை மாய்த்துக் கொள்வேன். அதைத் தவிர வேறு மார்க்கம் எனக்கில்லை. அதன் பின்னரும் பல பிறவிகளாயினும் கடும் விரதங்கள் நோற்று உங்களை அடைய முயற்சிப்பேன்.



**ருக்மணி வரைந்த மடலை கண்ணனிடம் கொடுத்தனுப்புதல்**

இவ்வாறு தான் வரைந்த காதல் மடலில் முத்திரையிட்டு அதனைத் தனக்கு நம்பிக்கைக்குரிய பிராமணன் ஒருவரிடம் கொடுத்து கண்ணனிடம் சேர்ப்பிக்கும் படி வேண்டினாள். அதன்படி அவ் அந்தணனும் ருக்மணியின் காதல் மடலை கண்ணனிடம் சேர்ப்பிக்கின்றார். கண்ணனும் அந்த மடலை படித்து தன் மீது அன்பு கொண்டு தன்னை மனதில்நிறைத்துள்ள ருக்மணியின் விருப்பத்தை நிறைவேற்றவும் செய்திட்டார். இவ்வாறு ருக்மணிக்கும் கண்ணனுக்கு இனிதே திருமண மும் நடந்தேறியது. ருக்மணியின் ஆழமான காதல் கண்ணனையே கட்டிப் போட்டது என்றே கூற வேண்டும்.

**மாதவி கோவலனுக்கு எழுதிய காதல் மடல்**

சிலப்பதிகாரத்தில் கூட் முதல் முதலில் எழுதப்பட்ட காதல் கடிதம் குறித்த கருத்தாடல் இழையோடுகின்றது. சிலப்பதிகாரத்தில் இரண்டு காதல் மடல்கள் வரையப்பட்டுள்ளன. அவை இரண்டும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மாதவியால் கோவலனுக்கு எழுதப்பட்டவையாகும். முதல் கடிதம் எழுதப்பட்ட சந்தர்ப்பமே இதுவாகும். கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியோடு இல்லறம் நடத்தி வருகின்றான். இந்த நிலையில் இந்திர விழாக் காணச் சென்ற சமயம் கானல்வரிப் பாடல்களை கோவலனும் மாதவியும் மாறி மாறி யாழ் மீட்டிப் பாடுகின்றனர். இந்தப் பாடல்களின் குறிப்பை உணர்ந்த கோவலன் மாதவியானவள் இன்னொருவனிடத்தில் அன்பு கொண்டுள்ளாள் எனக் கருதி அவள் மீது ஊடலுற்று மாதவியைப்



பிரிந்து சென்று விடுகின்றான். இது கண்ட மாதவியும் கோவலன் ஊடல் நீங்கி தன்னிடம் மீண்டும் வந்திடுவான் என காத்திருக்கின்றாள். ஆனால் கோவலன் வரவில்லை. கோவலன் மீது அன்பு கொண்டிருந்த மாதவிக்கோ கோவலன் பிரிவானது உள்ளத்தில் வேதனையை தூண்டி விட்டது. காதல் துன்பத்தால் வாட்டமுற்றாள். தன் மனநிலையினையும், தன் அடையும் துயரம் பற்றியும் கோவலனுக்கு தெரியப் படுத்திட ஓர் மடல் வரைந்தாள்.

உலகில் வரழும் உயிர்கள் எல்லாம் ஒன்றொடு ஒன்று துணை சேர்ந்து இன்பத்தை அடைய வழி செய்யும் இனிய இளவேனில் எனும் இளவரசன் வந்து விட்டான். அந்தி மாலைப் பொழுதிலே அரும்புகின்ற காதல் எனும் துன்பத்தின் மேல் திங்களாகிய செல்வன் சந்திரன் வந்து தோன்றினான். அவன் செவ்வியன் அல்லன். ஆனால் காமதேவன் மன்மதனனோ, ஒன்று சேர்ந்து இன்பம் கண்ட காதலர்கள் சிறு பொழுது பிரிய நேரிட்டாலும், அவ்வாறு பிரிந்து சென்றவர் மீண்டும் வாராமல் போயினும் தன் மலரம்புகளைச் செலுத்தி அவர் தம் அரிய உயிரையே பறிக்கும் தன்மை கொண்டவன். கோவலரே இந்த நிலையானது நீர் அறிந்ததே அன்றி புதுமையானது அல்ல. ஆகவே மீண்டும் என்னிடம் வந்து அருள் புரிவீராக. எனவாறு அமைகின்றது.

அன்புள்ளம் கொண்டு நாமும் காதல் கடிதம் வரைந்திடுவோம்.

# மன்னார் தமிழ்ச் சங்கத்தினுடைய ஏற்பாட்டில் வள்ளுவம் கண்ட தமிழ்த்தேசியம் சொற்பொழிவு












மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'வள்ளுவம் கண்ட தமிழ்த் தேசியம்' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. தமிழ்நாட்டில் இருந்து வருகைதந்த அருட்திரு வெனி இளங்குமரன் அடிகளார் இந்தச் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள குடும்பப்பணி நிலைய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

விருந்தினர் மதிப்பளிப்பு மங்கல விளக்கேற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவியரினால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டது. தொடர்ந்து இறைவணக்கப் பாடல் இடம்பெற்றது. பின்னர் மன்னார் கலார்ப்பனா நாட்டியப்பள்ளி மாணவியரினால் வரவேற்பு நடனம் நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் அறிமுக உரையாற்றினார். சொற்பொழிவின் நிறைவில் மன்னார் மாவட்டச் செயலர் மோகன் றாஸ் வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக மன்னார் தமிழ்ச்சங்க நிதிச்செயலாளர் ஜனாப் கலீல் முஹம்மது நஜீம் நன்றியுரை ஆற்றினார்.

**வாஸ் கூஞ்ஞ**

# இஸ்லாமுக்கு விரோதமான பொய்

எங்கு நோக்கினும் பொய். எல்லா இடங்களிலும் பொய். 'பொய் ஒரு குற்றமே அல்ல' எனும் மனோபாவம் சமூகத்தின் அடிமனதில் கள்ளத்தனமாக உறைந்து கிடக்கிறது.

ஆட்சியாளர் முதல் அடிமட்டக் குடி மகன் வரை, நாடாளும் தலைவர் முதல் நடைபாதை வியாபாரி வரை, சமூகத்தின் அனைத்துத் தளங்களிலும் பொய் நீக்கமற நிறைந்து நிற்கிறது. 'பொய் சொல்லும் வாய்க்கு போஜனம் கிடைக்காது' என்பதெல்லாம் பொய்யான தகவல் என்பது போன்றும், இதுபோன்ற சொலவடைகளைக் கவனித்துக் கொண்டிருந்தால் காலம் தள்ள முடியாது என்பது போன்றும் சமூகம் வேகமாக சென்றுகொண்டிருக்கிறது.

பொய்களால் கட்டமைக்கப்பட்ட சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தொலைக்காட்சி விளம்பரங்கள் பொய் சொல்கின்றன. திரைக்காவிய நாயகர்கள் பொய் சொல்கின்றனர். அதிகார வர்க்கத்தில் இருப்பவர்களும் பொய் சொல்கின்றனர். அதிகாரத்தை அடைய விரும்புகின்றவர்களும் பொய் சொல்கின்றனர்.

புன்னகையிலும் பொய் ஒளிந்திருக்கிறது, கண்ணீரிலும் பொய் கலந்திருக்கிறது. யாரைத்தான் நம்புவதோ தெரியவில்லை. பொய்சூழ் உலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். உண்மை மகத்தானது என்பதைக்கூட பொய்யாகவே கூறிக்கொண்டிருக்கின்றோம்.

உண்மை என்பது தந்திரமோ மந்திரமோ அல்ல, அது தான் வாழ்வின் ஆதாரம். இஸ்லாத்தைப் பொறுத்தவரை இந்த ஆதாரம் தான் 'ஈமான்' எனும் இறைநம்பிக்கை. இந்த இறைநம்பிக்கை எவ்வளவு தூரம் மனதில் வலுவாக உள்ளதோ அவ்வளவு தூரம் ஒருவர் உண்மை பேசுவார். நம்பிக்கையின் சதவீதத்தைப் பொறுத்து வாயிலிருந்து வரும் வார்த்தைகளில் உண்மையும் பொய்யும் கலந்திருக்கும் அவ்வளவுதான்.

உண்மையான இறைநம்பிக்கை கொண்டிருப்பவர் (முமின்) உள்ளும் புறமும் ஏக இறையை நம்பிக்கை கொண்டு அதன்படி செயல்படுவார். அந்த நம்பிக்கைக்கு ஒருபோதும் அவர் மாறு செய்யமாட்டார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) 'உண்மை, நிச்சயமாக நன்மைக்கு வழிகாட்டும். நன்மையானது நிச்சயம் சொர்க்கத்திற்கு வழிகாட்டும். ஒரு மனிதர் உண்மை பேசிக்கொண்டே இருப்பார். இறுதியில் அவர் 'வாய்மையாளர்' என்று அல்லாஹ்விடம் பதிவு செய்யப்படுவார். இதைப் போன்றே பொய் நிச்சயமாகத் தீமைக்கு வழிவகுக்கும்; தீமை நரகத்திற்கு வழிவகுக்கும். ஒரு மனிதர் பொய் பேசிக்கொண்டேயிருப்பார். இறுதியில் அவர் அல்லாஹ்விடம் 'பெரும் பொய்யர்' எனப் பதிவு செய்யப்படுவார்'. (புகாரி, முஸ்லிம்)

'இதயங்களின் மருத்துவர்' என்று அறியப்படும் இப்னுல் கையும் (ரஹ்) ஒரு எறும்புடன் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை 'மிஃப்தாஹ் தாருஸ் ஸஆதா' என்ற நூலில் இவ்வாறு விவரிக்கின்றார்.

ஒருநாள் ஒரு மரத்தடியில் நிழலுக்காக நான் அமர்ந்து இருந்தேன். அப்போது அந்த மரத்தடியில் இருந்து ஒரு எறும்பு நான் இருக்கும் இடத்திற்கு அருகே ஊர்ந்து வந்தது. அங்கே இறந்துபோன வெட்டுக்கிளியின் இறக்கை ஒன்று கிடந்தது.

அதைத் தூக்கிச் செல்வதற்காக பலமுறை அந்த எறும்பு முயன்றது. பாரமாக இருந்த காரணத்தால் அதனால் தூக்க இயலவில்லை. உடனே அது தன்னுடைய வசிப்பிடத்தை நோக்கி வேகமாகத் திரும்பிச் சென்றது. சற்று நேரத்தில் எறும்புப் படையே வரிசையாக வந்தது. அவை அந்த இறக்கைக்கு அருகே வந்ததும் நான் அந்த இறக்கையை கையால் உயர்த்தினேன். அவை இறக்கையைத் தேடின. கிடைக்காதபோது திரும்பிவிட்டன. ஆனால் அந்த முதல் எறும்பு மட்டுமே அங்கேயே நின்றது. (அதுதான் முதல் எறும்பாக இருக்கக்கூடும் என்று எனக்குத் தோன்றியது) உடனே நான் அந்த இறக்கையை கீழே போட்டேன். அந்த எறும்பு மீண்டும் அதனைத் தூக்க முயற்சித்தது, முடியவில்லை. மீண்டும் தன் படைகளைக் கூட்டிவரச் சென்றது. முதல் முறையைவிட குறைவான எறும்புக் கூட்டம் வெளியே வந்தது. அவை அருகில் வந்ததும் மீண்டும் நான் அந்த இறக்கையை உயர்த்தினேன். அவை தேடின. கிடைக்காதபோது மீண்டும் வசிப்பிடம் நோக்கித் திரும்பின. அந்த ஒற்றை எறும்பு மட்டும் அங்கேயே நின்றது. நான் மீண்டும் அந்த இறக்கையைப் போட்டேன். மூன்றாம் முறையும் அது தனது படையை அழைத்துவரச் சென்றது. முதல் இரண்டு முறையைவிட குறைவான எண்ணிக்கையில் கொஞ்சம் எறும்புகள் வசிப்பிடத்திலிருந்து வெளியே வந்தன. இப்போதும் நான் அந்த இறக்கையை உயர்த்தினேன்.

அப்போதுதான் ஆச்சரியமான ஒரு செயலைப் பார்த்தேன். ஆம்.. அந்த எறும்புக் கூட்டம் கோபம் கொண்டன. தங்களை ஏமாற்றி அழைத்து வந்த அந்த ஒற்றை எறும்பை சூழ்ந்துகொண்டு அதன் கை கால்களைத் துண்டித்தன. பின்னர் வயிற்றைக் கிழித்துத் துண்டு துண்டாக உடைத்துப் போட்டன. அந்த எறும்பு இறந்தது. உடனே நான் அந்த இறக்கையை மீண்டும் போட்டேன். ஆயினும் காலம் கடந்துவிட்டது.

உடனே அங்கிருந்து எழுந்து சென்று எனது ஆசிரியர் இப்னு தைமிய்யா அவர் களைச் சந்தித்து விவரத்தைக் கூறினேன். அவர் சொன்னார்: 'அல்லாஹ் உனது பாவங்களை மன்னிப்பானாக, மீண்டும் இவ்வாறு செய்யாதே. பொய் உரைப்பதை பெரும் பாவம் என்று எறும்புகள் கருதுகின்றன.

அல்லாஹ்வின் படைப்பில் ஆச்சரியப் படைப்பு இந்த எறும்புகள். பொய் உரைத்தால் என்ன தண்டனை என்று எறும்புகளுக்குக் கற்றுக்கொடுத்த அல்லாஹ் ஆச்சரியமானவன். பொய் உரைப்பது பெரும் தவறு எனும் சிந்தனை எறும்பு களின் உணர்வில் கலந்துள்ளது'.

எறும்புகளுக்குத் தெரிகிறது பொய் சொல்வது கொலைக் குற்றம் போன்ற பெரும் பாவம் என்று. ஆயினும் மனிதர்கள்..? இங்கு பலர் பொய்யை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை.

நிஷாந்தன்

# திரௌபதி

## பெண்மையின் சிறப்பில் மேன்மை பெறும் மங்கை



மகாபாரதம் எனும் அருங்காப்பியத்தில் பல கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ள தன்மைகளை கண்ணுறலாம். அத்தகு பாத்திரங்களில் திரௌபதி எனும் கதாபாத்திரம் பெண்மையின் மேன்மையினையும், சிறப்பினையும் உரைத்திடுவதாக இழையோடுகின்றது. ஆகவே தான் இன்று வரைக்கும் திரௌபதி பத்தினி தெய்வமாக மானிடர் வாழ்வில் போற்றப்படுகின்றாள். பாஞ்சாலி, கிருஷ்ணை, யாகசேனி எனும் நாமகரணங்களால் அவள் சிறப்புறுகின்றாள்.

**திரௌபதியின் பிறப்பு**

பாஞ்சாலம் எனும் நாட்டின் அரசன் துருபதன். அவர் துரோணரின் நண்பர். ஆனால் துரோணருடன் கொண்ட தர்க்கத்தின் காரணமாக அவரை கொல்வதற்கும், தனக்கு அவமானம் அளித்த அர்ச்சுனனுக்கு மணம் முடித்துக் கொடுப்பதற்கு எனவும் ஒரு ஆண் மகனையும், ஒரு பெண் மகவையும் வேண்டி ஒரு யாகத்தினை மேற்கொண்டான் துருபத மன்னன். ஆம், யாகத்தின் பயனால் அந்த யாக நெருப்பில் இருந்து முதலில் திருஷ்டத்யும்னன் எனும் ஆண் மகவு தோன்றினான். அடுத்து பேரொளியும், பேரழகும் கொண்டதாக ஒரு பெண் மகவு வெளித் தோன்றியது. அவளே திரௌபதி. அக்கனியில் இருந்து பிறந்தவள் ஆகவே யாகசேனி எனும் நாமம் பெற்றாள். அன்று முதல் பாஞ்சாலத்தின் இளவரசியாக வளர்ந்து வந்தமையால் அவள் பாஞ்சாலி எனவும் அழைக்கப்பட்டு வந்தாள்.

**திரௌபதியின் சுயம்வரம்**

இவ்வாறு இருக்கும் போது பாஞ்சாலியும் மணப் பருவத்தை அடைந்தாள். இந்த நிலையில் அவள் திருமணத்திற்காக மாபெரும் சுயம்வரம் ஒன்றினை அரசன் துருபதன் அனைத்து நாட்டு அரசர்கள், மற்றும் இளவரசர்களுக்கும் தெரியப்படுத்தினான். அதன்படி திரௌபதியின் சுயம்வரத்தில் கலந்து கொண்டு அவள் மணமாலையை பெற்றிடும் விருப்பம் கொண்டு அனைத்து நாட்டு அரசர்களும் பாஞ்சால தேசம் வருகை தந்தனர். அந்த சுயம்வரத்தில் யாரும் எதிர்பாராத விதமாக ஆச்சரியம் தரும் போட்டி ஒன்று அறிவிக்கப்பட்டது. அதாவது நிலத்திலிருந்து சிறிது உயரத்தில் ஒரு சக்கரம் சுழலும், அதில் ஒரு மீனின் உருவம் பொருத்தப்பட்டிருக்கும். அதன் கீழ் நீர் நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருக்கும். மேல் சுழலும் மீனின் விம்பம் கீழுள்ள நீரிலே தென்படும். அதன்படி நீரின் விம்பத்திலே கண்ணுற்று மேலுள்ள மீனின் கண்ணை அம்பு கொண்டு துளைக்க வேண்டும். இதுவே போட்டி. அந்தப் போட்டியில் வெற்றி பெற்றவன் அர்ச்சுனன். திரௌபதி அர்ச்சுனனுக்கு மாலையிட்டாள்.

> ஒரு சமயம் பாண்டவர்களும் கௌரவர்களும் சூதாட்டம் ஒன்றில் ஈடுபடுகின்றனர். சூதாட்டத்தில் பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் தமக்குச் சொந்தமான அனைத்தையும் பணயமாக வைத்து அவற்றை இழந்து இறுதியில் திரௌபதியை பணயப் பொருளாக வைத்து அவளையும் இழந்து விடுகின்றார்.

**பாஞ்சாலி பாண்டவரின் மனைவியாதல்**

இந்த நிலையில் தன் மனம் விரும்பிய படி அர்ச்சுனனைப் கரம் பற்றிய மகிழ்ச்சியில் அர்ச்சுனனோடு அவன் இருப்பிடம் நாடிச் சென்றாள். ஆனால் அங்கு விதிவசத்தால் ஒரு சம்பவம் அரங்கேறியது. குந்திதேவி மொழிந்த வாக்கினால் திரௌபதி பாண்டவர் ஐவருக்கும் மனைவியாக வேண்டிய சங்கடம் ஏற்பட்டது. ஆனால் அது பாஞ்சாலி முற்பிறப்பில் விரும்பி சிவபெருமானிடத்தில் பெற்றுக் கொண்ட வரத்தின் படி இந்தப் பிறப்பில் நிகழவிருப்பதை வியாச முனிவர் வாயிலாக அறிந்து கொண்ட பாஞ்சாலி அதை மனமகிழ்ந்து ஏற்றுக் கொண்டு அந்தக் கணமே பாண்டவர் ஐவருக்கும் மனைவியாகினாள். இவ்வாறு பஞ்சபாண்டவர் வாயிலாக திரௌபதி பெற்றெடுத்த பிள்ளைகள் ஐவர். அவர்கள் உபபஞ்ச பாண்டவர்கள் என அழைக்கபட்டனர்.

**சபையில் துகிலுரியப்படலும் கண்ணன் அருள் பெறலும்**

ஒரு சமயம் பாண்டவர்களும் கௌரவர்களும் சூதாட்டம் ஒன்றில் ஈடுபடுகின்றனர். சூதாட்டத்தில் பாண்டவர்களில் மூத்தவனாகிய தருமன் தமக்குச் சொந்தமான அனைத்தையும் பணயமாக வைத்து அவற்றை இழந்து இறுதியில் திரௌபதியை பணயப் பொருளாக வைத்து அவளையும் இழந்து விடுகின்றார். இந்த நிலையில் கௌரவர்களில் மூத்தவனாகிய துரியோதனன் திரௌபதியை அரச சபைக்கு வரவழைத்து அவளை துகிலுரியச் செய்து மானபங்கப் படுத்திட முயற்சி மேற்கொண்டான். ஆனால் அந்தச் சமயத்தில் திரௌபதியோ தன் மனதில் கண்ணனை நினைத்து, இரு கரங்களையும் தலையின் மேல் குவித்து கோவிந்தா கோவிந்தா என மனமுருக வேண்டி நின்றாள். பாஞ்சாலியின் அபயக் குரல் கேட்ட கண்ணபிரானும் அவள் மானம் காத்திட அங்கு தோன்றினான். எல்லோரும் காணும் படி வகை பல, வண்ணம் பலவாக உள்ள சேலைகளை பலவற்றை கொடுத்தருளினாள். துச்சாதனன் பாஞ்சாலியின் சேலையை அகற்றிட மேற்கொண்ட முயற்சியானது தோல்வியடையவே சோர்ந்து கீழே விழுந்தான். இவ்வாறு சபையிடத்திலே கண்ணன் திருவருள் கொண்டு மானம் காக்கப்பட்டாள் திரௌபதி.

**அரச சபையிடத்தில் திரௌபதி மேற்கொண்ட சபதம்**

இந்தச் சம்பவம் இவ்வாறு நடந்து முடிந்ததும், பாஞ்சாலி கோபம் பொங்கிட பெரும் சபதத்தினை சபை தனிலே அரங்கேற்றினாள். தன் நீண்ட பசுமையான கூந்தலை விரித்து, துச்சாதனனின் மார்பில் இருந்து வெளிவரும் குருதியை என்கூந்தலில் தடவிய பின்னரே இந்தக் கூந்தலை நான் முடிந்து கொள்வேன் என யாவரும் வியப்புறும் வகையில் சபதம் செய்தாள். அதன்படி அவள் செய்த சபதமானது வீமன் வாயிலாக நிறை வேற்றப்படுகின்றது. அதன் பின் விரித்து விட்ட தன் கூந்தலை முடித்துக் கொள்கின்றாள்.



**பத்தினித் தெய்வாக பாஞ்சாலி போற்றப்படுதல்**

இவ்வாறு வாழும் காலம் முழுவதும் இன்பம் காணாது துன்பத்தையை அதிகளவில் அனுபவித்தவளே இந்தப் பாஞ்சாலி. மன உறுதியும், கற்பின் வலிமையும் கொண்டவள். இறைவன் மீது நீங்கமற பக்தி உடையவள். இதனால் தான் பாரதி கூட பாஞ்சாலி மீது மதிப்புக் கொண்டு பாஞ்சாலி சபதம் எனும் பாடல்த் தொகுப்பினை பாடிச் செய்தான். ஆம் மேற்ப் போந்த காரணங்களை ஆதாரமாக்கி திரௌபதி இன்றும் பத்தித் தெய்வமாக போற்றப்பட்டு வருகின்றாள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**நாட்டார் வழிபாட்டில் திரௌபதி**

இன்றும் எம் வாழ்வியலில் நாட்டார் தெய்வ வழிப்பாட்டில் திரௌபதி அம்மன் வழிபாடு சிறப்புற்று விளங்குவதைக் கண்ணுறலாம். இது தவிர ஆகம முறை சார்ந்த திரௌபதி அம்மன் ஆலய வழிபாடும் காணப்படுவதை நாம் கண்ணுறலாம். இந்தியா மற்றும் இலங்கையிலும் திரௌபதி பத்தினித் தெய்வாக போற்றி வழிபடப்பட்டு வரும் மரபு திரௌபதி எனும் பாத்திரக்கூறு பெற்றுக் கொள்ளும் மேன்மையினையும், சிறப்பினையும் குறித்து நிற்கின்றது அல்லவா?

**திரௌபதியாளை போற்றுவோம்**

இத்துணை சிறப்புக்களால் மேன்மையுறும் திரௌபதி குறித்த விமர்சனங்கள் பல உள்ளன என்பதும் கண்கூடு. ஆனால் திரௌபதியாள் குறித்த வரலாற்றினை முழுமையாக நாம் படித்தால் எம் சந்தேகங்கள் நீங்கிவிடும். பாரதம் போற்றிப் புகழும் பாஞ்சாலி எனும் நாமத்தாள் இன்றும் பத்தினித் தெய்வாக, பெண்மையின் உயர்ந்த அர்த்தபடிகமாக இலக்கியங்களில் மட்டுமன்றி மானிடர் உள்ளங்களிலும் உயர்ந்துள்ளாள் என்றால் மிகையில்லை. ■

# சிறந்த ஆளுமையானவர் பேராசிரியர் சுசீந்திரராஜா

திருமதி திரிலோஜனி ஜெயக்குமார்



சிப்பிக்குள் முத்து உள்ளது. அந்த முத்தை ஒருவர் சிப்பிக்குள் இருந்து வெளியே கொண்டுவரும் போதுதான் அதன் அழகு, பெறுமதி எல்லாமே தெரியும். அதே போன்று மயிலிட்டிக் கிராம சபையின் மைந்தன் பேராசிரியர் சி. சுவாமிநாதன் சுசீந்திரராஜா. புகழ்மிக்க மிகப்பெரிய புலமையாளருடைய வாழ்வு எந்தவித ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமுமின்றி கடந்த மாதம் 11ஆம் திகதி மறைந்துவிட்டது.

பேரா. சு. சுசீந்திரராஜா இவரது பெயருக்கு அமைய ராஜாவாகவே இருந்திருக்கிறார். ஆரம்பக்கல்வியை ஞானோதயா வித்தியாசாலையிலும் பின்னர் நான்கு வருடங்கள் ஆங்கிலமொழிக் கல்விக்காக யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரியிலும் அதன் பின்னர் சமஸ்கிருத மொழியை விருத்தி செய்யும் வகையில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றுள்ளார். 1958ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்மொழியையும் பட்டப்படிப்பாகப் பயின்றுள்ளார்.

1967ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரியில் விரிவுரையாளராக இணைந்து தைமாதம் 1971ஆம் ஆண்டு கொழும்பு-களனிப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 1980ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் யாழ். பல்கலைக் கழகத்திலே விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 1984ஆம் ஆண்டில் தமிழ்மொழியியல் துறை பேராசிரியரானார். 1999ஆம் ஆண்டில் முதுநிலைப் பேராசிரியரானார். அத்துடன் தமிழ்மொழி மற்றும் பண்பாட்டுக் கற்கைநெறிக்கான தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவரது சேவை மொழியியல் கிறிஸ்தவ நாகரிகம் இஸ்லாமிய நாகரிகம் ஆங்கில மொழியியலுக்கான கற்கை நெறிகளுக்கும் பெறுபேறாக இருந்திருக்கிறார்.

சைவசித்தாந்தத்துறையில் இவருக்கிருந்த ஈடுபாடும் பணியும் உயர்வானது. இத்துறையில் கட்டுரைகளும் எழுதியுள்ளார். மோனசா பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், சென்னை பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் இவர் மொழியியல் துறைக்கான ஆலோசகராக பரீட்சகராக சேவையாற்றியிருந்தார்.

பேராசிரியர் சுசீந்திரராஜா இத்துணை சிறப்புக்களைக் கொண்டிருந்த போதும் அவர் அமைதியான அடக்கத்துக்கான செயல்திறன் கொண்டவர். பல்வேறு பரிமாணங்களில் பணிசெய்து தனது எண்பத்தி ஆறாவது வயதிலே எம்மைவிட்டு மறைந்துள்ளார். ■

# காளமேகத்தார் என்னும் கவிக் குசும்பர்!

பிரகாஸ்

சிலேடைப் பாடல்கள் என்றாலே காளமேகத்தார்தான். சிலேடைகளின் முன்னோடி என்று அவரைக் குறிப்பிட்டுக் கொண்டாலும் அதில் தவறொன்றும் இல்லை என்பதாகவே தெரிகிறது. காளமேகத்தாலின் சிலேடைகளைப் பற்றி இந்தப் பகுதியில் பார்த்து வருகின்றோம். கடந்த வாரம் யானையையும், வைக்கோலையும் ஒப்பிட்டு அவர் ஆற்றிய கவி பற்றிப் பார்த்தோம். இந்த வாரம் ஆமணக்கையும் யானையும் ஒன்றென்கிறார் அவர். பாடல் இதுதான்

*முத்திருக்கும் கொம்பசைக்கும்*
*மூரித்தண் டேந்திவரும்*
*கொத்திருக்கும் நேரே*
*குலைசாய்க்கும் – ஏத்திசைக்கும்*
*தேமணக்கும் சோலைத்*
*திருமலைரா யன்வரையில்*
*ஆமணக்கு மால்யானை யாம்.*

ஆமணக்குச் செடியில் ஆமணக்கு முத்து இருக்கும். (ஊன்றுகோல் போன்ற) தன் கொம்பை அசைக்கும். உள்ளே துளை உள்ள மூரித்தண்டு ஏந்தி வளரும். கொத்தாக இருக்கும் ஆமணக்குக் குலையை நேரே உயர்த்தித் தலையைச் சாய்க்கும் என்றவாகவும் இதற்குப் பொருள் கொள்ளலாம். யானை முத்துப்போன்ற தன் வெண்ணிறக் கொம்பை (தந்தத்தை) அசைக்கும். உள்ளே துளை உள்ள தன் துதிக்கைத் தண்டை ஏந்திக்கொண்டு வரும். கொத்தாகப் பழுத்திருக்கும் வாழைமரத்துக் குலையைச் சாய்க்கும் என்று இதை நோக்கலாம். அடுத்த வாரம் இன்னொரு பாடலுடன் காளமேகத்தார் வருவார்.




# ஆஸியின் பேர்த் மாநகரில் தமிழ் விழா








ஆஸ்திரேலியாவின் பேர்த் மாநிலத்தின் தெற்குப் பகுதியில் கடந்த மாதம் தமிழ்விழா முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் மொழி, கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் ஆடல், பாடல், நாடகம், வில்லுப் பாட்டு போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

## மரண அறிவித்தல்



தோற்றம்
24 . 05 . 1953

மறைவு
11 . 02 . 2019

### நடேசு தர்மகுலசிங்கம் (புண்ணியமூர்த்தி)

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு தர்மகுலசிங்கம் (புண்ணியமூர்த்தி) 11.02.2019 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு பூமணி தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் செல்வமணி தம்பதிகளின் அன்பு மருமகனும் ஈஸ்வரியின் அன்புக் கணவரும் நாகபூசணியின் அன்புச் சகோதரனும் பாகீஸ்வரன், ஜெகதீஸ்வரி, சர்மினி, நிறோசா, வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்வதாஸ், சுகந்தினி, சர்வராஜா, சர்வகுமார், யோகநாதன், பிரபு ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் யோகேஸ்வரி, நெடுஞ்செழியன், இளங்கோவன், பார்த்தீபன், கரிகாலன், காண்டீபன், கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கிஷானா, லக் ஷகன், தக் ஷயா, அட்சயா, றஜிஸ்னா, விசோபா, அனிருத், சுதேசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2019) புதன்கிழமை 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோட்டைக்காடு,**
**மல்லாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23273)(14,17)

**077 917 7060**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
29 . 04 . 1950

விண்ணில்
24 . 02 . 2018

### அமரர் தியாகராசா குருக்கள் பாலசுப்பிரமணிய குருக்கள்

திதி:-13.02.2019



ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்?
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**துன்னாலை வடக்கு,**
**கரவெட்டி.**

கண்ணீர்விழிகளுடன் உங்கள் பாசமுள்ள
**குடும்பத்தினர்.**
**076 460 2379, 076 884 0022**

## மரண அறிவித்தல்



தோற்றம்
24 . 01 . 1918

மறைவு
08 . 02 . 2019

### இம்மனுவேல் சிசில் சந்திரசேகரா
(சிறாப்பர்)

மங்கையர் இல்லம் புனித அந்தோனியார் வீதி, மாதகலைச் சேர்ந்த முன்னாள் இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர் இம்மனுவேல் சிசில் சந்திரசேகரா தனது 101 ஆவது வயதைப் பூரணமாக நிறைவு செய்தபின்பு 08.02.2019 வெள்ளிக்கிழமை இறைபதடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பிலிப் சவரிமுத்து சந்திரசேகரா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி கபிரியேல்பிள்ளை தோமஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற திருமதி மேரி சவேரியா மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி இரத்தினேஸ்வரி சேவியர், ரவீந்திரன் சந்திசேகரா, புலேந்திரன் சந்திரசேகரா ஆகியோரின் அன்பு தகப்பனாரும், பிரான்ஸிஸ் சேவியர், திருமதி யூலியட் சந்திரகேசரா, திருமதி ரூபராணி சந்திரகேசரா ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி ஜெனி அல்போன்சஸ், திருமதி ஜெசி தேவராஜன், ஜெரி சேவியர், செல்வி போஷியா சந்திரசேகரா, செல்வி அன்ரோனியா சந்திரகேசரா, செல்வன் ஜெஸ்மன் அன்ரனி சந்திரசேகரா, செல்வி ஆன் சிசிலியா சந்திரசேகரா ஆகியோரின் அன்புப் பேரனும், செல்வி ஷன்ரெல் தேவராஜன், செல்வன் சன்செஸ் தேவராஜன், செல்வன் ஷவேரா தேவராஜன், செல்வி கெதா் நற்றாலியா அல்போன்சஸ் ஆகியோரின் அன்புப் பூட்டனும், காலஞ்சென்றவர்களான அகஸ்ரீன் சந்திரசேகரா, திருமதி புளொசம் ஜோசப், விக்டர் சந்திரசேகரா மற்றும் திருமதி புஷ்பம் இராஜேந்திரம் (கனடா), காலஞ்சென்ற அல்போன்சஸ் சந்திரசேகரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான முத்துராசா தோமஸ், இராஜேந்திரம் தோமஸ், செல்வி மனோன்மணி தோமஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் 16.02.2019 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ரவீந்திரன் சந்திரசேகரா - 077 453 2699,**
**புலேந்திரன் சந்திரசேகரா - 0044 786 9151473,**
**ஜெனி அல்போன்சஸ் - 077 544 2408, வீட்டுத்தொலைபேசி - 021 225 2394**

(CS 23264)(11,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு
24 . 07 . 1967

இறப்பு
10 . 02 . 2019

### கந்தசாமி ஜெயக்குமார்

"கௌரிபவனம்" வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெயக்குமார்(குமார்) 10.02.2019 கனடாவில் காலமானார்.

அன்னார் யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவருமாவார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி(திரவியம்) இராசபூபதி தம்பதிகளின் அருமை மகனும் குணரட்ணம் (குணம்) பரமேஸ்வரி(பரம்) தம்பதிகளின் அன்பு மருமகனும் சுஜீவாவின் (ஜீவா) அன்புக் கணவரும் நர்த்தனா, தக் ஷனா, யாதவன், அச்சுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரட்ணம்(மாஸ்டர்) இன் அன்பு மருமகனும் செல்வபூபதி(பவா) அவர்களின் பெறாமகனும் ஜெயகௌரி(கௌரி) - சோதீஸ்வரன் (லண்டன்), ஆனந்தகௌரி(ஆனந்தி) - நந்தகுமார்(கனடா), சாந்தகௌரி(சாந்தா) - விமலநாதன் (லண்டன்) ஆகியோரின் ஆருயிர் சகோதரனும் சிறீதர்(கனடா), சுதாகர்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயந்தன்(லண்டன்), நிரோஷன்(கனடா), சுயந்தன் (லண்டன்), தரண்யா(லண்டன்), ஷாயீசன்(லண்டன்), ரண்யா(கனடா), கிருஷாந் (கனடா), ஸ்வப்னா(சுவிஸ்), ஸ்வேதா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜிதா - மயில்வாகனம்(கனடா) அவர்களின் உடன்பிறவா சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 17.02.2019 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23273)(14,17)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் நித்திய குருக்களாக
நீண்ட காலமாக இறைபணியாற்றிய
**சிவராமலிங்க குருக்கள்**
**மனோகரராஜா குருக்கள்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
கைதடி வீரகத்திப் பிள்ளையாரைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**நம்பிக்கைப் பொறுப்பாளர்**
**பரிபாலன சபையினர்,**
**கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில்**
**முதலாய கோயில்கள்.**

(CS/23280) (11,17)

## நல்லூர் பிரதேசசபை

### அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2019

முகாமைத்துவசேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்டு 2013.01.01 ஆம் திகதியில் உள்ளவாறானநல்லூர் பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணிவிபரங்களுக்கமையவும் பிரதமசெயலாளர் அவர்களின் NP/01/02/03/01/14 இலக்க 2019.01.19 ஆம் திகதிய கடிதத்திற்கு அமைவாகவும். சுகாதாரத்தொழிலாளி பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | பதவி | தரம் | வெற்றிடங்கள் |
|---|---|---|---|
| 01 | சுகாதாரத்தொழிலாளி | III | 02 |

**01. சம்பளங்கள்**

25.01.2008 ஆம் திகதிய அரசாங்கநிர்வாக சுற்றறிக்கை இல 03/2016 இன் அட்டவணை 1 இற்கமைய இப்பதவிகளுக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (24250-10X250-10X270-10X300-12X330-36410) PL-1-2016 ஆகும். எனினும் சுற்றறிக்கையில் அட்டவணை 11 இன் படி சம்பளம் வழங்கப்படும்.

**02. சேவை நியந்தனைகள்**

1. இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதாகும்.
2. விதவைகள் /தபுதாரர்கள் அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புசெய்தல் வேண்டும்.
3. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகாலத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**03.பொதுத் தகைமைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித்தியன்று 18 வயதுக்குகுறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
3. நன்னடத்தை உடையவராகவும் சிறந்ததேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் .வேண்டும்
4. விண்ணப்பதாரிநல்லூர் பிரதேசசபைஎல்லைக்குள் நிரந்தரவசிப்பிடம் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இவ்விண்ணப்பம் முடிவுத்திகதிக்கு முன்னர் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் நல்லூர் பிரதேசசபை எல்லைக்குள் வசித்தல் வேண்டும் (வதிவிடச் சான்றிதழ்) மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**04.கல்வித் தகைமைகள்**

கல்விபொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவகையில் இரண்டு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரேஅமர்வில்
ஐந்து (05)பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** சுகாதாரத்தொழிலாளி பதவிக்கு ஆகக்குறைந்தது தரம் 8 சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கமுடியும் ஆயினும் மேற்கூறிய கல்வித்தகைமை உடையோரிடம் இருந்து பொருத்தமான. போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்திலேயே இவ்விண்ணப்பங்கள் பரீசிலிக்கப்படும்.

**05.தெரிவுசெய்யப்படும் முறை:**

தெரிவானது அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுவினால் வழங்கப்படும் நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**06.விண்ணப்பிக்கும் முறை:**

1. நல்லூர் பிரதேசசபையில் ரூபா 100/=Vat (15%),NBT(2%) இனை செலுத்தி விண்ணப்பபடிவத்தைப்பெற்றுபூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூரணப்படுத்தி "செயலாளர். நல்லூர் பிரதேசசபை. 14/05 கருவேப்புலம் வீதி.கொக்குவில்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.
3. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.
4. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகள் அனைத்தும் விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.
5. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமை யற்றவரென நியமனத்திற்கு முன்னரோ. நியமனத்தின் பின்னராகவோ. நியமனத்தின் போதோ. முன்வைக்கப்படும் ஏதேனும் தகவல் ஒன்று பொய்யானதாக தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் இரத்துச்செய்யப்படும்.

**07.விண்ணப்பத்தை உறுதிப்படுத்தல்**

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பத்தை தமது பிரிவுக்கான கிராம உத்தியோகத்தரின் மூலம் உறுதிப்படுத்தி அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

**09.விண்ணப்ப முடிவுத்திகதி**

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் 2019.03.06 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்ககூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என்பதுடன் காலதாமதமாகும் மற்றும் உரியமுறையில் பூரணப்படுத்தாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்தவிண்ணப்பங்கள் கோரப்பட்டபின்னர் அல்லது கோரப்படும் காலத்தில் ஆட்சேர்ப்பைத் தாமதிக்கச் செய்யும். மாற்றியமைக்கும் அல்லது இரத்துசெய்யும் அனைத்து அதிகாரமும் நல்லூர் பிரதேசசபையின் செயலாளருக்கு உண்டு.

**சு.சுதர்ஜன்**
**செயலாளர்,**
**நல்லூர் பிரதேசசபை.**
**13.02.2019**

## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - மல்லாகம்

விண்ணப்பதாரர் - மகேந்திரன் சத்தியஜித்
முகவரி - ஏழாலை வடக்கு. ஏழாலை

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டராம்-12. வல்லை றோட் என்ற இடத்தில் குறித்த ஆதனம் பதிவேட்டில் இல்லை.

குறித்த ஆதனத்தை கொழும்பைச் சேர்ந்த ஜெகதீஸ்வரி வேலாயுதம் என்பவர் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி இறஞ்சினி விஸ்வநாதன் அவர்கள் முன் 30.01.2011 ஆம் ஆண்டு 1266 இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் உறுதி செய்துள்ளார். அதில் ஆதனமானது தனது அறுதி எனவும். நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக முற்றாக ஆவணங்கள் எரிந்துவிட்டதென வெளிப்படுத்தி இருக்கின்றார்.. பின்னர் அதனை அவரின் மகள் குசலகுமாரன் பெண் ராதா என்பவருக்கு அதே நொத்தாரிஸ் மூலம் 31.01.2011 திகதிய 1267 இலக்க உறுதி மூலம் நன்கொடையளித்தார். முன்னர் அவர்கள் தம்பிராஜா மோகனதாஸ் பெண் வேணுகா என்போருக்கு நொத்தாரிஸ் சொ.சண்முகலிங்கம் மூலம் 09.02.2017 திகதிய 5465 உறுதி மூலம் அறுதியளித்துள்ளனர். மோகனதாஸ் மனைவி வேணுகா ஆகியோர் நொத்தாரிஸ் கு.விசுவலிங்கம் முன்பாக 07.04.2018 திகதிய உறுதி இல 7969 மூலம் மகேந்திரன் சத்தியஜித் என்பவருக்கு அறுதியாக விற்றனர்.

**ஆதன விபரம்:**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் மல்லாகம் இறையும் கலைசுட்டி வளவும் நிலப்பரப்பு 02 குழி 17.70 கிணறு அளவுப்படி நிலப்பரப்பு 02 குழி 16.23 இதில் கொடுக்கப்பட்ட குழி 16.23 நீக்கி மிகுதியாகவுள்ள நிலப்பரப்பு 02ம் கிணறும் மேற்படி காணி நில அளவையாளர்

M.சண்முகநாதனின் வரைபட இலக்கம் 2099C/30.01.2017 இன்படி lot 01B என்று காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - வீரசிங்கம் செந்தூரனின் ஆதனம்
மேற்கு - கணபதி கிருஸ்ணமூர்த்தியின் ஆதனமும் கதிரவேலு தெய்வேந்திரராசாவினதும்
ஆதனம் தற்போது விவேகானந்தன் சுபத்திராதேவியின் ஆதனம்.
தெற்கு - ஸ்டேசன் றோட்

மேற்குறித்த ஆதனத்தை மகேந்திரன் சத்தியஜித் எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சோ.சுகிர்தன்
தவிசாளர்.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)

## மரண அறிவித்தல்



## திருமதி இந்திராதேவி கமலநாதன்

சங்கிலியன் வீதி. நல்லூரைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி பூதர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராதேவி கமலநாதன் நேற்று (12.02.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - தில்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் விஸ்வநாதர் கமலநாதனின் பாசமிகு மனைவியும் தர்சினி. தயாளினி (கனடா). வசந்திரா. பிரதீஸ், கீதாஞ்சலி (பிரான்ஸ்). சர்மிலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சூரியகுமார். பாஸ்கர் (கனடா). செல்வகுமார். ஜெயபாஸ்கரன் (பிரான்ஸ்). திவ்யா. அஜித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராஜேந்திரம். ரஞ்சினிதேவி. விமலாதேவி. காலஞ்சென்ற சண்முகானந்தன் மற்றும் கமலாதேவி. பத்மாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானராசா (கனடா). சிறிரங்கநாதன், காலஞ்சென்ற விமலநாதன் ஆகியோரின் மைத்துனியும் சுஜந்தன். கவினா. ஹஸ்வின், சஜித். டக்சன். டதுசன், அன்பிகா. டிருக் ஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2019) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நீர்வேலியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**மலையான் கலட்டி வீதி,**
**பூதர்மடம்,**
**நீர்வேலி தெற்கு, நீர்வேலி.**

**குடும்பத்தினர். 021 223 1844, 077 3696421, 077 9051312.**

(CS 23136/15/17)

## மரண அறிவித்தல்

# தம்பித்துரை பாலகிருஷ்ணன் (JP)

***(ஓய்வுபெற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி வணிகக்கல்வி ஆசிரியர், சைவ பரிபாலன சபை பரீட்சைக்குழு உபசெயலாளர், தொண்டைமனாறு வெளிக்கள நிலைய நிர்வாகசபை உறுப்பினர், சமாதான நீதவான்)***



கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறையினைப் பிறப்பிடமாகவும் கோவில் குடியிருப்பு சாவகச்சேரியை நிரந்தர வசிப்பிடமாகவும் இல. 75, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பாலகிருஷ்ணன் நேற்று (12.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கரம்பன் கிழக்கு தம்பித்துரை - மகேஸ்வரி தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - நாகரத்தினம் தம்பதிகளின் அருமை மருமகனும் ஜெயசோதியின் அன்புக் கணவரும் துசாந்தனின் (நூலக உதவியாளர், யாழ். பொது நூலகம்) அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற வா.பேரின்பமணி மற்றும் பத்மநாதன் (கனடா), பாலச்சந்திரன் (அமெரிக்கா), ராதா, ரூபா (ஜேர்மன்), சாந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயச்சந்திரா, ஜெயமணி, கதிர்காமநாதன் (கனடா), மகேந்திரன், ஜெயரஞ்சினி (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் மங்கை, சரஸ்வதி, வாமதேவன், ஜெகநாதன், ஒகஸ்ரின், பவகரன், ஞானவல்லி, ரதீந்திரன், பத்மாசனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நந்திவர்மன், பிரதீபா, காஞ்சனா,அஜித், தர்சினி, அரண், அரணி, அபினயன், அபிராமி, சங்கீதா, ஜனனி, றுஷாந், கல்யாணி, நளாயினி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சஞ்சீவன், றுசான் ஆகியோரின் பெரிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2019) வியாழக் கிழமை பி.ப. 2.00 மணியளவில் 75, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி எனும் முகவரியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: திருமதி ஜெயசோதி பாலகிருஷ்ணன் (மனைவி) 077 602 4969, பா.துசாந்தன் (மகன்) 078 354 1211**

(CS_J13/17)

## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 12 . 1929



உதிர்வு 11 . 02 . 2019

# திருமதி ஜெயலட்சுமி செல்வரட்ணம்

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி விதானையார் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயலட்சுமி செல்வரட்ணம் (11.02.2019) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியரத்தினம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் மருமகளும் காலம்சென்ற செல்வரட்ணத்தின் (தபால் திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தர்மபாலன், குணபாலசூரியர் மற்றும் இராசலஷ்மி (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரியும் மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), கமலாதேவி (கனடா) மற்றும் காலஞ்சென்ற சண்முகரட்டிணம் ஆகியோரின் மைத்துனியும் ஜெயந்தி (கனடா), காலஞ்சென்ற பிறேமலாதேவி ஆகியோரின் அன்பு தாயாரும் சிவராசா (கனடா) காலஞ்சென்ற இராமநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆரணி - அசோகன் (கனடா), பிரதீபா (கனடா) யுகேந்திரன் - விதுஷ்கரணி, தனுசன், தனுகரன் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் பிரணவி, பிருந்தவி, ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2019) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.39, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர். 021 222 6344, 077 685 8024**

## மரண அறிவித்தல்

# திருமதி சின்னம்மா ஆறுமுகம்

பாரதி வீதி கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் காரைக்கால் இணுவிலை நிரந்தர முகவரியாகவும் பிரதான வீதி, கிராஞ்சியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா ஆறுமுகம் கடந்த (08.02.2019) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான கணபதி - சீதேவி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் பாசமிகு மனைவியும் தேவி, செல்வராஜா, துரைராஜா (கனடா), தேவராஜா (கனடா), தெய்வேந்திரராஜா (ஜேர்மனி), மகேந்திரராஜா (கனடா), தர்மலிங்கம் (ஜேர்மன்), குணராஜா (கனடா), வரதராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிராஞ்சி பூநகரியில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நாளை (14.02.2019) வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிருந்தாவனம் கிராஞ்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள் ளவும்.



மண்ணில் 07.03.1926 விண்ணில் 08.02.2019

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 977 1970, 077 365 5421**

(CS 23723/15/17)

## மஹா சக்தியுள்ள வசிய மாந்திரிகம்

எதையும் எதையும் அறியாத மாந்திரிகர்களிடம் ஏமாறாதீர்கள், என்னுடைய வசிய மாந்திரிகத்தினால் நான் அவர்களுக்கு சவால் விடுகிறேன்.

★காதலால் நீங்கள் வேதனைப்படுகிறீர்களா?
★காதலனால் - காதலியால் கைவிடப்பட்டவரா?
★பெற்றோர் விருப்பமின்மையா?
★கணவன் மனைவிக்கிடையில் முரண்பாடா?
★வேலைத்தளத்தில் பிரச்சினையா?
★காணி, சொத்து தொடர்பான பிரச்சினையா?

- இரகசியம் பேணப்படும்.
- நம்பிக்கை-உத்தரவாதம் கடைப்பிடிக்கப்படும்.
- உங்கள் உள்ளங்களில் எழும் பிரச்சினைகளை என்னிடம் தெரிவியுங்கள்.
- நேரடியாக வரமுடியாதவர்களுக்கு பதிவுத்தபால் மூலம் செய்து அனுப்பப்படும்.

ஆண், பெண் வசியம்

அனைத்து வசிய மாந்திரிகங்கள் மூலம் மக்களின் மனம் கவர்ந்தவர்

**வேலு ராஜேஸ்வரி** அவர்கள்
மாத்தளை.

**0778 432 602 / 075 302 4239**

என்னைத் தொடர்புகொள்பவர்களுக்கு ஒருநாளும் தோல்வியில்லை.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
அதிசயம்
அருமைநாயகம்

பிறப்பு
10.09.1931

இறப்பு
13.02.2018

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார் - (எபேசியர் 2:7)

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(CS/2324) (11.17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சின்னையா இரத்தினம்

(முன்னாள் காலிக்கடை வர்த்தகர்-V.S.R)



திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இரத்தினம் நேற்று (12.02.2019) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இரத்தினம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

0212053308

(CS/23279)(11.17)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் மகாலிங்கம் மகேந்திரன்

ஆண்டுகள் பதினொன்று ஓடிப்போனது ஆறாததுயர் மட்டும்
இன்றும் ஓய்ந்ததில்லை மாறாத பந்தமும்
நீங்காத நினைவுகளும் அலைகொண்டு போனாலும்
அப்பா எங்களோடுதான் வாழ்ந்திடுவாய்
வருடங்கள் பலவானாலும்

சுதுமலைச் சந்தி,
மானிப்பாய்.

(CS/232587) .17)

என்றும் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



மலர்வு 01 . 10 . 1964

உதிர்வு 10 . 02 . 2019

### பாலசிங்கம் ஜெகதீஸ்வரன்

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை (Castrop Rauxci) வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஜெகதீஸ்வரன் 10.02.2019 ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், உதயபாலியின் அன்புக் கணவரும், பிரதீப், அனுசியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெயாம்பிகா மற்றும் ஜெயானந்தி, ஜெய்க்குமார், ஜெயபாலன், ஜெயதாசன், ஜெயப்பிரதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நிரோஜா, கிஷாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், றியானியின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2019) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பரகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளப்பிட்டி வீதி,
கொக்குவில் மேற்கு.

(CS/23278)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.


### காணி விற்பனை

நாவற்குழி கேரதீவு பிரதான. வீதியில் இருந்து 100மீ தூரத்தில் குடியிருப்பதற்கும் தென்னை பயிரிடுவதற்கும் உகந்த 20 பரப்பு (நெ.ப.) காணி விற்பனைக்கு உண்டு. (தரகர்கள் தவிர) - 077 900 8439

### விற்பனைக்கு

கார் விற்பனைக்கு
Nissan(300 - XXXX)
077 611 0625

(CS 23275) (14.17)

### விற்பனைக்கு

கலப்பின மாடுகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 021 226 5107

### தேங்காய் விற்பனைக்கு

தோலுடன் தேங்காய் மற்றும்
நாற்றுத் தேங்காய் மொத்தமாக
விற்பனைக்குண்டு.
077 921 3835

(AKN655) (11.17)

### பணிப்பெண் தேவை

வீட்டில்தங்கியிருந்துவேலைசெய்வதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். தங்குமிடவசதி மற்றும் உணவு வசதி செய்து தரப்படும்
077 410 2724

### சேயோன் மாபிள் கிளினர்

குளியல் அறை, சமையல் அறை, மலசல கூடம். இவை அனைத்தும் சுத்தம் செய்து தரப்படும்.
- 077 803 3199

### முகவர்கள் தேவை

வூட் பினிஷ் பொலிவு தரைகள், 10 % நீர்புகா மற்றும் கறையான் எதிர்ப்பு நீடித்த உத்தரவாதம் செயல்திறன் மற்றும் இருக்கும் தரைக்குமேல் இலகுவாக பதிக்கக்கூடியவை. - 076 827 7833

### காணவில்லை (ஆவணங்கள்)

மோட்டார் சைக்கிள் ஆவணம் (கு.மகேஸ்வரன்) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பிரதான வீதி மக்கள் வங்கி அண்மையில் சில தினங்களுக்கு முன் தவறியுள்ளது. கண்டெடுத்தவர்கள் 077 904 9691, 076 534 3034 உடன் தொடர்பு கொள்ளவும்.
சன்மானம் வழங்கப்படும்.

077 131 0841

(CS/23277) (11.17)

முத்தையா பேக்கரி, யாழ்ப்பாணம்


## எம் அன்புத் தெய்வத்தின் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சின்னராசா செல்வராணி

மண்ணில் 24.09.1957

விண்ணில் 10.03.2014

அன்னையே எமை நீங்கி
ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ
ஓயாமல் கேட்குதம்மா
அன்பான உங்கள் குரல்
ஆண்டுகள் ஓடினாலும்
ஆறாது எம் துயரம் - உம்
ஆத்மாவின் சாந்திக்காய்
அனுதினமும் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

கருணாநிதி சனசமூக நிலையம்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

(AC 946)(14.17)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 17.01.2019 வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்
அமரர்

### மருதப்பா கந்தசாமி

(ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்)



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் 16.02.2019 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் மறுநாள் 17.02.2019 அன்று தியாகி அறக்கொடை நிலையத்தில் (நாவலர் வீதி யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ள ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

32/3 சோமசுந்தரம் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

# எம். ஐ. கிறிஸ்ரி றமீன்

**(பிரபல கட்டட ஒப்பந்தகாரர், உரிமையாளர் - தனு எலக்றிக்கல்ஸ் அன் ஹாட்வெயர் பிரதான வீதி, சுயந்தன் மரக்காலை, துண்டிச் சந்தி, கொழும்புத்துறை, கொழும்புத்துறை, சென். றொசாறியன் சனசமூக நிலைய ஸ்தாபகர்களில் ஒருவர்)**



யாழ். அச்சுக்கூட வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இப்ராகிம் கிறிஸ்ரி றமீன் கடந்த (09.02.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகமது இப்ராகிம் - திரேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் சந்தியாப்பிள்ளை - றோசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் அமலநாயகியின் (கமலா) அன்புக் கணவரும் நபிஷா, அனிஷா, காலஞ்சென்ற யுஸ் ரீனா மற்றும் ஈசா, கனிஸ்ரா, தனுஷா, வினோத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரபாகரன், சேவியர், லக்ஸ மன், உதயச்சந்திரன், மரியறூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மாசில்லா, காலஞ்சென்றவர்களான சந்திரா, யூசுப் மற்றும் ராகிலா, காலஞ்சென்றவர்களான பளீல், சுபைர் மற்றும் ரகூப், காலஞ்சென்ற பசீர் மற்றும் லைலா, அச்சா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான ஜோர்ச். குணம் மற்றும் அஞ்சல், அழகு, சின்னராசா, மல்லிகா, சிறி, பாஸ்கரன், பேபி, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், மணியம், அல்வின் மற்றும் வானு, குஞ்சு, ஆகிஷா, ராதா, தேவி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சானுகா, சயூரன், சுயந்தன், சுஜிவா, சுபானா, லக்சியன், குளோறியா, ஜெய்சன், ஆகிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (14.02.2019) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

**28/2, ஏ.வி. றோட், கொழும்புத்துறை.**

**குடும்பத்தினர்.**

**077 171 3175, 077 662 4364.**

## 07ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02.08.1948

உதிர்வு 13.02.2012

### அமரர் ஐயாக்குட்டி கனகரட்ணம்

நிஜமாக நீங்கள் மறைந்து ஏழு ஆண்டுகள்
ஆனதோ நீங்கள் இல்லாமனை
பொலிவிழந்து போனதுவோ ! உங்களை
நினைத்து தினம் தினம் நாம்
ஏங்கித்தவிக்கின்றோம் காலங்கள்
ஓடிக்கடந்தாலும் அப்பா உங்களை எங்கள்
உள்ளத்தில் வைத்து பூசிப்போம்.

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 17.01.2019 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவி

### அமரர் குணரத்தினம் வசந்தகுமாரி



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 14.02.2019 வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணிக்கு கீரிமலை தீர்த்தக்கேணியிலும் 16.02.2019 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு எமது இல்லத்திலும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் அதனை தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும் தாங்கள் குடும்பத்தினருடன் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

அச்செழு வடக்கு, நீர்வேலி

குடும்பத்தினர்
0776379722, 0774666231

## மரண அறிவித்தல்



மலர்வு 29.11.1936

உதிர்வு 10.02.2019

### திருமதி தெய்வநாயகி இராமு

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, காக்கைதீவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வநாயகி இராமு கடந்த (10.02.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் Ram Gunaa cosmetic Center (Colombo & Jaffna) உரிமையாளர் இ.குணரட்னம் (குணா), செல்வராணி (மலேசியா), ராசரட்னம் (ஜேர்மனி), ஜீவரட்னம்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2019) வியாழக் கிழமை யாழ்ப்பாணத்தில் (மூளாய் ஆஸ்பத்திரி வீதியில்) அவருடைய இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பித்தன மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

0777 643 081, 075 900 3360,
075 0313069

(CS 23136(15/17)

## 25க்கு முன்...

கொழும்பு, பெப்.13

போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடருக்கு முன்னர் கைது செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதை அரச தலைவர் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்த அரசு ஆட்சிக்கு வந்த 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற மனித உரிமைகள் சபை அமர்வில் இராணுவத்தினரால் போர்க் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர ஏற்றுக்கொண்டிருந்தார். அதையடுத்துப் போர்க் குற்றத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினருக்கு தண்டனையை பெற்றுக்கொடுக்க மனித உரிமைகள் சபை கால அவகாசம் வழங்கியிருந்தது.

எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 40ஆவது கூட்டத் தொடருடன் அந்தக் கால அவகாசம் நிறைவடைகின்றது. அதனால் இராணுவத்தினரைக் கைதுசெய்து சிறையில் அடைக்கும் நடவடிக்கையை அரசு முன்னெடுத்துள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரண்ணாகொடவை கைது செய்ய அரசு முயற்சி செய்கின்றது. அவருக்கு எதிராக தற்போது நீதிமன்றில் இருக்கும் வழக்கை காரணம் காட்டியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளது.

வசந்த கரண்ணாகொடவை கைது செய்வதற்காக அரசு கடந்த வருடம் முதல் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. அவருக்கு எதிராகக் கடற்படை வீரர்களிடம் இருந்து சாட்சிகளை பெற்றுக் கொண்டதுடன் சாட்சியமளித்த கடற்படை வீரர்களுக்கு சன்மானமும் வழங்கப்பட்டது. லெப்டினன் ஜென்ரல் சாமல் பெர்ணாந்து வசந்த கரண்ணாகொடவுக்கு எதிராக கடந்த வருடம் சாட்சியமளித்திருந்தார். அதற்காகத்தான் அவருக்கு அண்மையில் சுங்க திணைக்களத்தின் பணிபாளர் பதவியை வழங்க மங்கள சமரவீர நடவடிக்கை எடுத்திருந்தார். அதேபோன்று முன்னாள் கடற்படை தளபதியாக இருந்த ரியல் அட்மிரல் சின்னய்யாவும் அந்தப் பதவிக்கு வரமுன்னர் வசந்த கரண்ணாகொடவுக்கு எதிராக சாட்சியமளித்திருந்தார். அதற்காகத்தான் அவருக்கு தளபதி பதவி வழங்கப்பட்டிருந்தது. லெப்டினன் கமாண்டர் கிஷாந்த வெலகெதரவுக்கு ஆஸ்திரேலியாவில் அரசியல் பாதுகாப்பு வழங்கப் பட்டிருக்கின்றது.

போர்க் குற்றத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படும் மேலும் 59 பேருக்கு எதிராக ஜாஸ்மின் சூக்கா போன்றவர்கள் அடுத்த மனித உரிமைகள் சபை அமர்வில் முறைப்பாடு செய்யவுள்ளனர் என்று தெரியவருகின்றது. அதனால் அரசு போர்க் குற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றது என்பதை காட்டுவதற்காக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வசந்த கரண்ணாகொடவை கைது செய்யத் தீர்மானித்துள்ளது. இதற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலர், அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர மற்றும் நாடாமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா ஆகியோர் உடந்தையாக இருக்கின்றனர்.

போரை எமது இராணுவத்தினர் உயிர் தியாகம் செய்தே வெற்றி கொண்டார்கள். அதனால்தான் இன்று நாட்டில் அனைத்து இன மக்களும் நிம்மதியாக வாழ்ந்து வருகின்றனர். அரச தலை வர் உடனடியாக தலையிட்டு இராணுவத்தினர் கைது செய்யப்படுவதை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (எ-61)

## ஐ.நா. மனித...

நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல் தொடர்பான தீர்மானத்தின் மீது கவனம் செலுத்தப் போவதாகவும், சிரியா, தென்சூடான் தொடர்பான தீர்மானங்களையும் முன்வைக்கப் போவதாகவும் பிரிட்டன் கூறியுள்ளது.

பிரிட்டனுடன் இணைந்து, கனடா, ஜேர்மனி, மெசிடோனியா, மொன்ரெனிக்ரோ ஆகிய நாடுகள், இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைக்கவுள்ளன. 'இணை நாடுகள் மீண்டும் இலங்கையுடன் இணைந்து, செயற்பட எதிர்பார்க்கின்றன. இந்த ஒத்துழைப்பு 2015இல் ஆரம்பித்தது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப் பட்ட 30/1 தீர்மானத்தின் வாக்குறுதிகளை இலங்கை நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்த, இணைந்து செயற்படும். தீர்மான வரைவு இயல்பான நடைமுறைப்படி இருக்கும். அத்துடன், 2015 இல் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறுவப்பட்ட செயல் முறைகளை மேலும் விரிவுபடுத்தக் கோருவதாக அமையும். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நடை முறைகளுக்கு அமைய முறைசாரா பேச்சுக்களை நாங்கள் ஆரம்பிப்போம். மீண்டும் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு மனித உரிமைகள் சபையின் முழு ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறோம்' என்றும் பிரிட்டன் தெரிவித்துள்ளது. (ஓ.5)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## WALK -IN – INTERVIEW

Walk in interview for appointment of **University Medical Officer (on Assignment Basis)** will be held on 21.02.2019 at 09.00 a.m at the Board Room of this University.

**Qualifications:**
Medical Degree of a recognized University with at least three (03) years experience as Medical Practitioner. Retired Medical Practitioner will also be considered on need basis.

**Note:**
The selected Medical Officers should be prepared to work in the Health Centre-University of Jaffna, Siddha Medicine Unit, Kaithady and Ramanathan Academy of Fine Arts, Maruthanamadam of this University.

**Rate of payment:** Rs.610.00 (maximum of 7 hours per day)

**Selection:** By structured interview
Candidates are requested to appear with relevant certificates, NIC and **self prepared applications.**

**Registrar**
**University of Jaffna.**
**12.02.2019**

(CS 23256)(04.17)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தசாமி



பிறப்பு 25.04.1936

இறப்பு 11.02.2019

3 ஆம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும் 7 ஆம் வட்டாரம் குமுழமுனை முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி கடந்த திங்கட்கிழமை (11.02.2019) அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதி - தம்பதியினரின் மருமகனும் தங்கமணியின் பாசமிகு கணவரும் இராஜகுலசிங்கம் (அதிபர் மு/உண்ணாப்புலவு வித்தியாலயம்) மனோகரி, மனோகராம்பாள், மதியழகன், மயூரதன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளூராட்சி திணைக்களம் வடமாகாணம்), மன்மதன், இராஜகுலேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் விஜயநிர்மலா (ஆசிரியை மு/முஸ்லிம் மகாவித்தியாலயம் - தண்ணீரூற்று) சந்திரசேகரன், சுவர்ணா (தேவமைதிலி அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம்- யாழ்ப்பாணம்), சதீஷா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற மதுஷா மற்றும் சர்விதன், மனோஷா, கபிந்துஷா, கபிஷாளினி, சங்கவி, மதுரகவி, மதுரன், சரணி, பிருந்தன், வேணுஜன், கோபிஷா, ரமேஸ் ஆகியோரின் பேரனும் சஜிந்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2019) புதன்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குமுளமுனை தாமரைக்கேணி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 497 2971, 077 530 1966, 077 854 3887




**மேடம்:** உறவினர்கள் உற்சாகத்துடன் பணிபுரியும் நாள். பாகப்பிரிவினைக்காக எடுத்த முயற்சி கைகூடி வருவதற்கான அறிகுறி தோன்றும். பகை அகலும்.

**இடபம்:** சந்தோஷ வாய்ப்புகளைச் சந்திக்கும் நாள். பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும். வரவு எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

**மிதுனம்:** நிர்வாகத் திறமை பளிச்சிடும் நாள். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும். விழாக்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**கடகம்:** கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள். தடைப்பட்ட வருமானம் தானாகவே வந்து சேரும்.

**சிங்கம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைக்க வேண்டிய நாள். வீண் வாக்கு வாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** எதிர்காலத்தைப் பற்றிய பயம் ஏற்படும் நாள். எடுத்த முயற்சியில் தடை ஏற்படும். இடமாற்றம் செய்வது பற்றிய சிந்தனை மேலோங்கும்.

**துலாம்:** உத்யோக முயற்சி கைகூடும் நாள். உறவினர் பகை அகலும். பொது வாழ்வில் பொறுப்புகள் கூடும் . போட்டி களைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:** முன்னேற்றம் கூடும் நாள். இல்லத்திற்கு தேவையான விலையுயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு:** நட்பால் நல்ல காரியம் நடைபெறும் நாள். உத்யோகம் சம்பந்தமாக முடிவெடுக்க உகந்த மனிதர்களைச் சந்திக்கும் சூழ்நிலை உண்டு.

**மகரம்:** சகோதர வழியில் சந்தோஷச் செய்தி வந்து சேரும் நாள். இழுபறியான காரியங்கள் இனிதே முடிவடையும்.

**கும்பம்:** லாபம் இருமடங்காகும் நாள். சுபகாரியப் பேச்சுகள் முடிவாவதற்கான அறிகுறிகள் தோன்றும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மீனம்:** நிதானத்தோடு செயல்பட வேண்டிய நாள். நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம்.

## சுவிஸ்...

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது, இளையோருக்குச் சுயதொழில் பயிற்சிகளை வழங்குதல், மொழிக் கற்கைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்வது போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைப்பதற்குப் பன்னாட்டுச் சமூகம் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர், அதற்குரிய நடவடிக்கைகளை முன் னெடுக்கவேண்டும் என்று தூதுவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கான நீதி இதுவரை கிடைக்க வில்லை. இந்த ஆண்டு ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவை அமர்வில் இது தொடர்பாக முறையிடவுள்ளேன் என்றும் அவர் தூதுவர்களிடம் குறிப்பிட்டுள் ளார். (எ)

## ரணிலின்...

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். பலாலி வானூர்தித் தளத்தையும் சென்று பார்வையிடவுள்ளார். தலைமை அமைச்சர் செல்லவுள்ள இடங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவரது பாதுகாப்புப் பிரிவினரின் பொறுப்பாகும். அதற்காக அந்த இடங்களுக்கு முற்கூட்டியே சென்று நிலைமைகளை ஆராய்வது தலைமை அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் வழமையான நடவடிக்கையாகும்.

அதற்கு அமைவாக காங்கேசன்துறை துறைமுகத்துக்கு தலைமை அமைச்சர் பாதுகாப்புப் பிரிவினர் 6 நாள்களுக்கு முன்னர் சென்றுள்ளனர். முகாமுக்குள் செல்வதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதேபோன்று, பலாலி வானூர்தி நிலைய வான்படையினருக்கும், தலைமை அமைச்சர் நாளை வியாழக்கிழமை செல்லவுள்ள விவகாரம் தெரிவிக்கப்படவில்லை. பலாலி வானூர்தி நிலையத்துக்கு தலைமை அமைச்சர் வரவுள்ளாரா என்று வான் படையினர் தலைமை அமைச்சர் அலுவலகத்திடம் வினவியுள்ளனர். இதன்பின்னரே, தலைமை அமைச்சரின் யாழ்ப்பாண பயணத்தில் ஏற்பட்டுள்ள குழப்பம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. அதையடுத்து தலைமை அமைச்சரின் நிகழ்சி நிரல் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கீழ் உள்ள நிலையில் இந்தச் சம்பவங்கள் நடந்துள்ளன. (எ-ஒ.5.26)

## அராலி வீதியில்...

கொண்டு தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை 4 மணியளவில் அராலி வீதி, காக்கைதீவில் நடந்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பெண்கள் உந்துருளியில் சென்றுள்ளனர். அப்போது உந்துருளியில் முகத்தை மூடியவாறு வந்தவர்கள் உந்துருளியை இடித்து, விபத்து நடந்தது போன்று பாசாங்கு செய்துள்ளனர். உந்துருளியை நிறுத்தி விட்டு அது தொடர்பாகப் பேசிக் கொண்டிருந்தபோது, தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு தப்பியோடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண் முறைப்பாடு செய்ய வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யுமாறு அவர் திருப்பி அனுப்பப்பட்டார் என்றும் கூறப்பட்டது. (எ-26)

## சிங்கள...

"கூட்டாட்சி (சமஷ்டி) தொடர்பில் அன்று பிரச்சினை இருந்தது. இன்று தேர்தல் முறைமை தொடர்பில்தான் பிரச்சினை உள்ளது. தேர்தல் முறைமை இறுதி செய்யப்பட வேண்டும். அதுவரையில் புதிய அரசமைப்புக்கான சட்டவரைவையோ அல்லது சட்டத்தையோ நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரமுடியாது. ஏனென்றால் ஒரு கட்சியை மையப்படுத்திய அரசு அமையாத வரையில் இந்த விடயத்தைச் செய்யமுடியாது. சிறுகட்சிகளுடன் தொடர்ந்து அரசைக் கொண்டு நடத்த முடியாது. ஆகவே உறுதியான அரசை அமைக்கும் தேர்தல் முறைமையை உருவாக்க வேண்டும். அதன் பின்னரே புதிய அரசமைப்புப் பற்றிச் சிந்திக்க முடியும் என்பதே யதார்த்தமானதாகும்" என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோது, புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக வழிநடத்தல் குழு அமைக்கப்பட்டது.

வெளியில் ஒவ்வொரு அரசியல்வாதிகளும் புதிய அரசமைப்புத் தொடர்பில் ஒவ்வொரு விதமான கருத்துக்களை முன்வைக்கலாம். நாங்கள் தமிழ் மக்கள் மத்தியில் உண்மையை மட்டும் சொல்லுகின்றோம். தெற்கில் சிங்கள மக்கள் மத்தியில் புதிய அரசமைப்புத் தொடர்பில் பொய்ப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின் றன. அவர்களைச் சமாளிப்பதற்காக ஆட்சியில் உள்ளவர்கள் ஒவ்வொரு கருத்துக்களைச் சொல்லலாம். மூவின மக்களின் இணக்கத்துடன்தான் புதிய அரசமைப்பு நிறைவேற்றப்பட இருக்கின்றது.

ஒவ்வொருவரும் தத்தமது நிலைப்பாடுகளைத் தெரிவிக்கும் போது மக்கள் மத்தியில் குழப்பம் வரும். அது தவிர்க்க முடியாதது. அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழு கூடவுள்ளது. எப்போது கூடும் என்று அறிவிக்கப்படவில்லை. அந்தக் கூட்டத்தில்தான் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுப்போம். அதுதான் உத்தியோகபூர்வ தீர்மானமாக இருக்கும் - என்றார். (ஒ.5.22)

## ஒவ்வொரு...

மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று இந்தியாவில் வைத்து மகிந்த ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் அன்று தொடக்கம், அரசமைப்புத் திருத்தம் வேண்டாம், புதிய அரசமைப்புத்தான் வேண்டும் என்று கோருகின்றோம். பன்னாட்டுச் சமூகத்திடமும் எடுத்துரைத்துள்ளோம். ஐ.நா. தீர்மானத்திலும் இது சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. மகிந்த சொல்லும் காரணம் ஏற்றுக் கொள்ள முடியாது. புதிய அரசமைப்பின் ஊடாகத்தான் தீர்வைக் காணமுடியும். அதன் ஊடாகத்தான் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

மகிந்த ஒவ்வொரு இடங்களிலும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை முன்வைக்கின்றார். புதிய அரசமைப்பு வேண்டாம் என்று இங்கு வைத்துச் சொன்னவர், அங்கு சென்று அரசமைப்புத் திருத்தம் வேண்டும் என்கின்றார்.

அவர் தான் ஆட்சியைப் பிடிப்பதற்கும், எமது நாட்டு மக்களையும் வெளிநாடுகளையும் சமாளிப்பதற்கும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிடுகின்றார்.

எந்த அரசு ஆட்சியிலிருந்தாலும், புதிய அரசமைப்பின் ஊடாகவே தீர்வைக் காணவே நாங்கள் ஒத்துழைப்போம். அந்தத் தீர்வு அர்த்தபுஷ்டியாக இருக்கும் பட்சத்தில் அதற்கு ஆதரவளிப்போம் - என்றார். (ஒ.5.22)

## உயர்தர...

உயர்தர மாணவர்களுக்கு "ரப்" கணினிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் கல்வி அமைச்சர் அகிலவிராஜின் ஆலோசனைக்கமைய முன்னெடுக்கப்படவுள்ளன. நவீன கல்வியில் பன்னாட்டுத் தேவைகளுக்கு ஏற்பப் பாடசாலைக் கல்வியை உருவாக்கும் அரச வேலைத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை அளித்து நிதி ஒதுக்கீடு செய்ய நிதி அமைச்சர் மங்கள சமரவீர இணக்கம் தெரிவித்துள்ளார்.

"ரப்" கணினி வழங்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப் போகும் முறையை கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்வைப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஐ.நாவில்...

சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான குழுவினர் முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் அரச தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச.

இந்தியாவுக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச விடம் அங்குள்ள ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு எதிரான ஐ.நாவின் போர்க்குற்றத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி வரலாற்றுத் துரோகம் செய்தது ரணில் அரசு. இம்முறையும் இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் நிறைவேற்றப்படும். அதற்கும் ரணில் அரசு வெட்கம் இல்லாமல் ஆதரவு வழங்கும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமை நாடுகளின் பட்டியலில் இருந்து அமெரிக்கா வெளியேறியுள்ள நிலையில், பிரிட்டன், ஜேர்மனி, கனடா ஆகிய மூன்று நாடுகளும் இணைந்து இலங்கைக்கு எதிரான புதிய தீர்மானத்தைத் தயாரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

அந்த நாடுகளின் இராஜதந்திரிகள் கொழும்பில் தங்கியிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப் புடன் ஆலோசனை நடத்தியுள்ளனர். கூட்டமைப்பினரும் தமது நிகழ்ச்சி நிரலை அவர்களிடம் கையளித்துள்ளனர் என்று எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ரணில் அரசு இதை அறிந்தும் அமைதி காக்கின்றது. போர்க்குற்றத் தீர்மானத்தை எம் மீதும் எமது படையினர் மீதும் திருப்பிவிட்டு தாம் தப்பித்துக்கொள்ள ரணில் அரசு முயல்கின்றது. ஆனால், ஐ.நாவின் எந்தத் தீர்மானங்களைக் கண்டும் நாம் அஞ்சமாட்டோம். தீர்மானங் களை இலங்கையில் நடைமுறைப்படுத்தவும் விடமாட்டோம் - என்றார். (ஒ.5.22)

## பரீட்சைகளால்...

களுக்கு மேலதிக நெருக்குதல்களைக் கொடுக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக, லண்டன் க.பொ.த. சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளுடன் ஒப்பீடு செய்யும் வகையிலேயே இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

லண்டன் பரீட்சைகளை விடவும், இலங்கையின் பரீட்சைகள் உணர்வானவை என்று நம்பப்படுவதால் பாடவிதானங்களில் உள்ள பிரதான வேறுபாடுகள் போன்ற அம்சத்தை ஆராய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித் தெரிவித்துள்ளார்.

பாடவிதானங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டுமா?, மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் மணித்தியாலங்கள் மாற்றப்பட வேண்டுமா?, எத்தகைய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்? போன்ற விடயங்களை ஆராய்ந்த பின்னர் விதந்துரைகள் பரிசீலனைக்காக கல்வி அமைச்சுக்கு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவசியம் ஏற்படும் பட்சத்தில் முதலில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளில் முதலில் மாற்றம் செய்யப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## மனித...

மோனா ரிஷ்மாவிடம் உறுதியளித்துள்ளார் நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் சட்டப்பிரிவு அதிகாரி மோனா ரிஷ்மாவுக்கும், நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரளவுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீதி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக வழங்கப்பட்டுள்ள உறுதி மொழிகளை இலங்கை நிறைவேற்றும் என்று நம்புகின்றோம் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அதிகாரி தெரிவித்தார் என்றும் ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள இந்த நிலையில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. (எ)

# கடற்கரைக் கரப்பந்தாட்டம் புதிய பாரதி வி.க. வெற்றி

கிளிநொச்சி, பெப். 13

31ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் புதிய பாரதி இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புதிய பாரதி இளைஞர் கழக அணியை எதிர்த்து விவேகானந்தா இளைஞர் கழக அணி மோதியது. 21:18, 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் புதிய பாரதி இளைஞர்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)



சிறிசாய் விளையாட்டுக் கழக அணி



கண்ணன் இளைஞர் கழக அணி

# வலைப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, பெப். 13

31ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தால் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான வலைப்பந்தாட்ட போட்டித் தொடரில் ஆண்கள் பிரிவில் கண்ணன் இளைஞர்கழக அணியும், பெண்கள் பிரிவில் சிறிசாய் அணியும் வெற்றி பெற்றன.

விவேகானந்தநகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கண்ணன் இளைஞர்கழக அணியை எதிர்த்துத் திருவையாறு இளைஞர்கழக அணி மோதியது. 12:2என்ற புள்ளிகள் அடிப்படையில் கண்ணன் இளைஞர்கழக அணி வெற்றி பெற்றது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சிறிசாய் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துத் திருவையாறு விளையாட்டுக் கழக அணி மோதியது. 14:12 என்ற புள்ளி அடிப்படையில் சிறிசாய் அணி வெற்றி பெற்றது. (ஒ-23)

# பண்டிவிரிச்சான் மரியகொறற்றி வி.க., தட்சன மருதமடு ஐக்கிய வி.க.வெற்றி



மரிய கொறற்றி விளையாட்டுக் கழகம்



தட்சன மருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழகம்

மன்னார், பெப். 13

மடுப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டித் தொடரில் இருபாலருக்குமான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் பெரிய பண்டிவிரிச்சான் மரியகொறற்றி விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் தட்சனமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியும் கிண்ணத்தைக் கைப்பற்றின.

பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பெரிய பண்டிவிரிச்சான் மரியகொறற்றி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தட்சனமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மோதியது. இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் எந்தவிதக் கோலையும் பதிவு செய்யவில்லை. சமநிலைதகர்ப்பு உதைமூலம் வெற்றி தீர்மா னிக்கப்பட்டது. அதில் 8:7 என்ற கோல் கணக்கில் பெரிய பண்டிவிரிச்சான் மரியகொறற்றி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தட்சனமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சின்னப்பண்டிவிரிச்சான் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் ஒதுக்கப்பட்ட நேரத்தில் எந்தக் கோலையும் பதிவு செய்யவில்லை.

சமநிலை தகர்ப்பு உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. அதில் 7:6 என்ற கோல் கணக்கில் தட்சனமருதமடு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 13

வல்வை ஆதிசக்தி விளையாட்டுக்கழகம் மறைந்த வீரர்களின் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் கால்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அண்ணாசிலையடிவிளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுகழக அணி மோதவுள்ளது.

✦ ✦ ✦

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்டவிழாவைமுன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் இன்று புதன் கிழமை அரியாலை திருமகள் சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகவுள்ளன.

இந்தத் தொடரில் இன்று இரவு 7.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இரவு 8.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மட்டுவில்மோகனதாஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)

# விளையாட்டு அரங்க திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு அரங்கத் திறப்பு விழா கல்லூரி அதிபர் எஸ்.கே எழில்வேந்தன் தலைமையில் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினாராக இராஜாங்க கல்வி அமைச்சர்திருமதிவிஜயகலாமகேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் உதயகுமார், யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ.ஆனல்ட், மதிப்புறு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவன் ஒலிம்பியன் கலாநிதி என்.எதிர்வீரசிங்கம், பொறியியலாளர் வாசுதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ.23)



சிவகௌரி விளையாட்டுக்கழகம்



தோப்புக்காடு விளையாட்டுக் கழகம்

# கடற்கரை கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், பெப். 13

காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டித் தொடரில் இருபாலருக்குமான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் சிவகௌரி விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் தோப்புக்காடு விளையாட்டுக் கழக அணியும் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன. காரைநகர் உல்லாசக் கடற்கரையில் கடந்த சனிக்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சிவகௌரி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் சிவகௌரி விளை யாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தோப்புக்காடு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலாநிதி விளையாட்டுக்கழக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் தோப்புக்காடு விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. (ஒ.23)

# 3ஆவது இடத்தில் இறங்கியது வியப்பாக இருந்தது

கூறுகிறார் விஜய் சங்கர்

இந்தியக் கிரிக்கெட் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் விஜய் சங்கர் மெல்போர்னில் நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் அறிமுகம் ஆனார். நடைபெற்று முடிந்த நியூசிலாந்து அணிக்கெதிரான ரி-20 போட்டிகளிலும் சிறப்பாக விளையாடியிருந்தார்.

நியூசிலாந்துக்கு எதிரான ரி-20 தொடரில் விஜய் சங்கர் 3ஆவது துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்டார். அந்த இடத்தில் அவர் சிறப்பாக விளையாடினார். இறுதிப் போட்டியில் 28 பந்தில் 43 ஓட்டங்கள் விளாசி அனைவரது பார்வையையும் ஈர்த்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்: "அணி நிர்வாகம் என்னை 3ஆவது இடத்தில் களம் இறங்கி துடுப்பாட்டம் செய்யுங்கள் என்று கூறியது மிகப்பெரிய வியப்பாக இருந்தது. சூழ்நிலையைப்புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி விளையாடுவதில் கவனம் செலுத்தினேன். இந்திய அணிக்காக விளையாடும்போது, எல்லா விதங்களிலும் விளையாட தயாராக இருக்க வேண்டும்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து தொடர் முழுவதில் இருந்து அதிக அளவில் கற்றுக் கொண்டேன். நான் அதிக அளவில் பந்து வீசவில்லை. ஆனால், வித்தியாசமான சூழ்நிலைகளில் பந்து வீச கற்றுக் கொண்டேன். கோக்லி, ரோகித், டோனி எப்படி துடுப்பெடுத்தாடுகின்றார்கள் என்பதை பார்த்து அதிலிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டேன்.

என்னைப் பொறுத்தவரையில் இறுதிப் போட்டி கூட கற்றுக் கொள்வதற்கான அனுபவம்தான். அணிக்காக என்னால் வெற்றியை தேடிக்கொடுக்க முடியும் என்றால், தானாகவே அது என்னுடைய தனிப்பட்ட ஆட்டத்தை வளர்க்கும் - என்றார்.






சீன நிறுவனத்தின்

## ரூ.50 கோடி விளம்பர ஒப்பந்தத்தில் இந்திய வீராங்கனை பி.வி. சிந்து

ரியோ ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியன்ஷிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்று சாதனை படைத்த இந்தியாவின் நட்சத்திரப் பூப்பந்தாட்ட வீராங்கனையான பி.வி. சிந்துவை சீனாவைச் சேர்ந்த பிரபல நிறுவனமான லி நிங் என்ற நிறுவனம் ரூ.50 கோடிக்கு விளம்பர ஒப்பந்தம் செய்துள்ளது. நான்கு வருடத்துக்கான இந்த விளம்பர ஒப்பந்தத்தில் இவர் கையெழுத்திட்டார். உலகப் பூப்பந்தாட்டத்தில் கையெழுத்திடப்பட்ட மிகப்பெரிய ஒப்பந்தங்களில் சிந்துவின் ஒப்பந்தமும் ஒன்றாகும். மேலும் இந்த ஒப்பந்தத்துக்கான தொகையானது, பூமா நிறுவனம் கிரிக்கெட் வீரர் விராட் கோக்லிக்கு வழங்கப்பட்டதற்கு இணையானது எனவும் தெரிவித்தார் பங்குதாரர் மகேந்தர் கபூர். சிந்து ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாகக் காணப்படுகின்றார். மேலும் உலக அளவில் அதிக சம்பளம் வாங்கும் விளையாட்டு வீராங்கனைகள் தொடர்பாக வெளியிட்ட பட்டியலில், இவர் 7ஆவது இடத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாலாவுடன் காணாமற்போன விமானியைத் தேட நிதியுதவி

வழங்கினார் பிரான்ஸ் கால்பந்து வீரர்

ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் எமிலியானோ சலா இரண்டு வாரங்களுக்கு முன்னர் வானூர்தியில் காணாமல் போய் அண்மையில் வானூர்தி விபத்துக்குள்ளாகிய அவரது சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது. எனினும் வானூர்தியை செலுத்திய விமானி இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதனையடுத்து பொலிஸார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



இந்த நிலையில் காணாமல் போன விமானியை தேடும் பணிகளுக்காக பிரான்ஸ் கால்பந்து வீரர் கைலன் மப்பே 27 ஆயிரம் பவுன்ஸ் நிதியுதவி வழங்கியுள்ளார். இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் கேரி லிங்கர் 1,000 பவுன்ஸ் வழங்கி உள்ளார்.

விமானியைத் தேடும் பணிக்காக அவரது குடும்பத்தினர் நிதி திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விராட் கோக்லியை விட

## வில்லியம்சன், டிம்பெய்ன் சிறந்த அணித்தலைவர்கள்

ஷேன் வோர்ன் தெரிவிப்பு



உலக கிரிக்கெட்டில் விராட் கோக்லி சிறந்த தலைவராக இல்லை, ஆனால் வீரர்களை வழிநடத்துவதில் அவர் சிறந்த தலைவராக இருக்கலாம் என்று ஆஸ்திரேலிய சுழற்பந்து ஷேன் வோர்ன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

இப்போதைக்கு அணியின் தலைவராக அவர் சிறப்பாக செயற்படுகிறார். அணித் தலைவரின் உத்திகளுக்கும் அணியின் தலைவராக இருப்பதற்கும் வேறுபாடுகள் உள்ளன. நான் கோக்லியின் மிகப்பெரிய விசிறிதான். கிரிக்கெட் ஆட்டத்தின் இப்போதைய சிறந்த வீரர் அவர்தான். அணியை நன்றாக வழிநடத்துகிறார். உத்தி ரீதியாக பார்க்கும் போது நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன், ஆஸ்திரேலிய அணித் தலைவர் டிம் பெய்ன் மிகச் சிறந்த அணித் தலைவர்கள் - என்றார்.




## உலகக் கிண்ணத்தில் டோனி முக்கியமானவர்

சொல்கிறார் யுவராஜ் சிங்

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் டோனி இடம்பெறுவது குறித்து யுவராஜ் சிங் கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

டோனிக்குச் சிறந்த கிரிக்கெட் அறிவு இருக்கிறது. இலக்குக் காப்பாளராக இருப்பதால் ஆட்டத்தின் போக்கை நன்கு கணிக்கக்கூடியவர். அந்தப் பணியை அவர் பல வருடங்களாக தொடர்ந்து சிறப்பாகச் செய்து வருகிறார்.

அவர் ஒரு சிறந்த அணித் தலைவராகவும் பங்காற்றியிருந்தார். இளம்வீரர்களை மட்டுமல்லாமல் தற்போதைய அணித் தலைவர் விராட் கோக்லியையும் அனைத்து தருணங்களிலும் வழிகாட்டி வருகிறார். இதனால் முடிவு எடுக்கும் பணிகளுக்காகவே டோனி உலகக் கிண்ண அணியில் முக்கிய இடம்பெற வேண்டும். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடர் அவருக்கு சிறப்பானதாக அமைந்திருக்கிறது. வழக்கமான அவரது ஆட்டத்தைப் பார்ப்பதற்கு மகிழ்ச்சியாக இருந்தது- என்றார்.

## அல்வ்ஸ் அணி இலகு வெற்றி

ஸ்பானியாக் கழகங்களுக்கிடையில் லாலிகா தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வ்ஸ் அணி வெற்றிபெற்றது. அல்வ்ஸ் - லிவன்ற் அணிகளுக்கிடையில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வ்ஸ் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. முதலாவது பாதி ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் அல்வ்ஸ் அணி வீரர் லகுர்ட்டா கோல் ஒன்றைப் போட்டார். முதலாவது பாதி ஆட்டத்தில் அல்வ்ஸ் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பித்தது முதல் லிவன்ற் அணி எப்படியாவது ஒரு கோலைப் போட்டுவிட வேண்டும் என்று கடும் போட்டி போட்டுக் கொண்டு விளையாடியது எனினும் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 90 ஆவது நிமிடத்தில் அல்வ்ஸ் அணி வீரர் ரொட்றிகுஸ் ஒரு கோலைப் போட அல்வ்ஸ் அணி 2:0 என்ற கணக்கில் லிவன்ற் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.



## ஐ.பி.எல். போட்டிகளின் அட்டவணை இழுபறியில்

இந்தியக் கிரிக்கெட் சபையால் ஐ.பி.எல். ரி-20 கிரிக்கெட் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் இந்திய நாடாளுமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால், ஐ.பி.எல். போட்டி இந்தியாவில் நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்திருந்தது.
இது குறித்து இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகக்குழுத் தலைவர் வினோத் ராய் தெரிவிக்கையில் ஐ.பி.எல். தொடரின் அனைத்து போட்டிகளும் இந்தியாவில்தான் நடைபெறும் என தெரிவித்தார். ஐ.பி.எல். தொடர் மார்ச் ஆரம்பமாகும் என அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ள நிலையில் அட்டவணை இன்னமும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்படும் முன்னர் ஐ.பி.எல். போட்டிக்கான அட்டவணையை வெளியிட வாய்ப்பே இல்லை என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**வேலையாள்கள் தேவை**
அரிசி ஆலை ஒன்றுக்கு இரவு வேலைக்கு முன் அனுபவம் உள்ள அல்லது ஆர்வம் உள்ள ஆண் வேலை ஆள்கள் தேவை. சம்பளம் 2000/= மற்றும் உணவு மற்றும் தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- 076 943 5080

**எழுதுனர் தேவை**
யாழ்நகரிலுள்ள எமது கல்வி நிலையத்திற்கு பெண் எழுதுனர்கள் தேவை.
- யாழ்நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- O/L அல்லது A/L கற்றிருத்தல் போதுமானது
- வியாழன் காலை 09.00 இலிருந்து 4.30இற்குள் நேரடியாக வரவும்(நாளை)

SAAMSON 077 1570 486 077 621 4567

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 406
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.02.12
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 113,281,918/-
Y 05 24 31 62

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 524
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.02.12
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 62,478,045/-
வெற்றி இலக்கங்கள் 17 22 23 51 J

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 923
சீட்டிழுப்பு திகதி 2019.02.11 திங்கட்கிழமை
S 14 46 55 74
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 61,751,432/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 12.02.2019 வெற்றி வாரம் 2455 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 40 49 58
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 387, 722 /=

நியத ஜய
சீட்டிழுப்பு வாரம் 745
திகதி : 2019.02.12
வெற்றி இலக்கங்கள் 19 25 36 45 W
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 22,067,144/-



# கோக்லி சிறந்த துடுப்பாட்ட வீரர்

### சங்ககார நெகிழ்ச்சி

இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லி உலகின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் என இலங்கை முன்னாள் வீரர் சங்ககார புகழாரம் சூட்டியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
உலகின் சிறந்த கிரிக்கெட் வீரராக விராட் கோக்லி திகழ்கிறார். அவர் டெஸ்ட், ஒருநாள், ரி-20 போட்டிகளில் மிகவும் அபாரமாக விளையாடி நம்ப முடியாதவகையில்ஓட்டங்களைக்குவிக்கிறார். கிரிக்கெட்டின் அனைத்து கால கட்டத்துக்கும் சிறந்த துடுப்பாட்ட வீரராக அவர் விளங்குகின்றார் - என்றார்.

## தினேஸ் சந்திமல் இல்லாததை அறிந்து அதிர்ச்சியடைந்தேன்

### கூறுகிறார் ஹத்துருசிங்க

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றது. இலங்கை அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடவுள்ளது. இரு அணிகளுக்குமிடையில் 2டெஸ்ட் போட்டிகள், 5 ஒருநாள் போட்டிகள், இரண்டு ரி-20 போட்டிகள் இடம்பெறவுள்ளன. இதில் இன்று முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமாகின்றது. அறிவிக்கப்பட்ட அணியில் தினேஸ் சந்திமல் இடம்பெறவில்லை. அறிமுக வீரர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.
இதுகுறித்து இலங்கை அணியின் பயிற்சியாளர் ஹத்துருசிங்க தெரிவிக்கையில்: தென்னாபிரிக்க சுற்றுத் தொடரில் தினேஸ் சந்திமல் இணைக்கப்படாததை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன் - என்றார்.

## இந்திய முன்னாள் வீரர் மீது தாக்குதல்



இந்திய அணியின் முன்னாள் பந்து வீச்சாளரும், டெல்லி கிரிக்கெட் சங்க தேர்வுக்குழுத் தலைவருமான அமித் பண்டாரி இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டார். இதன் பின்னணியில் கிரிக்கெட் வீரர் ஒருவர் இருப்பது தெரிய வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்துக்கு முன்னாள் வீரர் கம்பீர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்; "அமித் பண்டாரி மீதான தாக்குதல் சம்பவத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது கடும் கண்டனத்துக்குரியது. இதற்கு காரணமான வீரருக்கு வாழ்நாள் தடை விதிக்க வேண்டும்"- என்றார்.

## லயன், மார்கஸ் ஆஸியின் விருதுகளை வென்றனர்

ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை ஒவ்வொரு வருடமும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் கிரிக்கெட் வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு விருதுகள் வழங்கி வருகிறது. இதேபோல் கடந்த வருடம் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கான விருதுகள் அண்மையில் வழங்கப்பட்டது.
இதில் சுழற்பந்து வீச்சாளரான நாதன் லயன் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதையும், வேகப்பந்து வீச்சு, சகலதுறை ஆட்டக்காரர் மார்கஸ் ஸ்டாய்னிஸ் சிறந்த ஒருநாள் போட்டி வீரருக்கான விருதையும் வென்றனர்.



## இங்கிலாந்து வீரர் ரூட்டை திட்டிய கேப்ரியல்

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் 3ஆவது நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் சிறப்பாக விளையாடி சதம் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மேற்கிந்தியத்தீவுகளின் வேகப் பந்து வீச்சாளர் கப்ரியல் சிறப்பாகப் பந்து வீசியிருந்தார். ஆனால் ஜோ ரூட் அந்த பந்துகளில் ஆட்டமிழக்காமல் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். இதனால் விரக்தியடைந்த கேப்ரியல், ரூட்டைப் பார்த்து கோபத்தில் முணுமுணுத்திருந்தார். போட்டியைப் பார்த்த ரசிகர்களுக்கு அவர் ஏதோ திட்டினார் என்பது தெரிந்தது. மேலும், 'மைக் ஸ்டம்பில்' கேப்ரியல் பேசியதும் பதிவாகவில்லை.
போட்டி முடிந்த பின்னர், ரூட்டிடம் இதுகுறித்து கேட்டதற்கு, களத்தில் நடந்தது பற்றி கூற விரும்பவில்லை என்று தெரிவித்தார்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.